வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 12.10.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 311 | பக்கங்கள் : 16

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிப்பு!

## மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி

- கோதுமை மா மேலும் ரூ. 10ஆல் உயர்வு
- பாணின் விலை 5 ரூபாயால் அதிகரிப்பு
- கொத்துரொட்டியும் ரூ. 10ஆல் உயர்வு
- தேநீர், பால் தேநீரின் விலைகளும் கூடின
- சீமெந்து பைக்கற் 93 ரூபாய் அதிகரிப்பு
- எரிவாயுவின் விலையில் மீண்டும் மாற்றம்

கொழும்பு, ஒக். 12

நாட்டில் அத்தியாவசிய பொருட்கள், பாண், சிற்றுண்டிகள் உள்ளிட்ட உணவுப் பொருட்கள், சிமெந்து என்பவற்றின் விலைகள் நேற்று முதல் உயர்வடைந்தன.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை செப்ரெம்பர் மாத இறுதியிலும், பால்மா, கோதுமை மா, சிமெந்து, எரிவாயு என்பவற்றுக்கு விதித்திருந்த

15

# என்றுமில்லாத அளவுக்கு எரிபொருள் விலை எகிறும்

கொழும்பு, ஒக். 12

வரலாற்றில் இடம்பெறாத அளவுக்கு எரிபொருள் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மக்களுக்கு எரிபொருள் விலை அதிகரிப்புக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தவுள்ளதாகவும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதைனைக் குறிப்பிட்டார்.

இந்த விலை அதிகரிப்பை அரசாங்கம் தாங்கிக்கொண்டுள்ளதாகவும் முடிந்தளவு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார். (அ)

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக எனக்கு தகுதி!

## தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சுமந்திரன்



கொழும்பு, ஒக்ரோபர் 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்குப் பின்னர் அந்தத் தலைமைப் பதவிக்கு தான் தகுதியானவர் என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

15

# மேலும் 23 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் மேலும் 23 பேர் கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 11 ஆண்கள், 12 பெண்கள் என அடங்குவர் என அரச தகவல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13,354 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தவைத்தோர் பேரினவாதிகளே

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

கிளிநொச்சி, ஒக். 12

"தமிழ் இளைஞர்கள் சயனைட் குப்பியையும், துப்பாக்கியையும் ஏந்த வைத்தவர்கள் சிங்கள - பௌத்த பேரினவாதிகளே", என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், "தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனே ஆயுதங்களை நாம் ஒரு போதும் விரும்பி ஏற்கவில்லை. அவை என்மீது

15



# வடக்கு ஆளுநராக ஜீவன் ஜனாதிபதி முன் பதவியேற்பு

கொழும்பு, ஒக். 12

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா நேற்று ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று

15

# ராஜபக்ஷ அரசு உடன் பதவி விலகவேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஒக். 12

"நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விருப்பத்துக்கு ஏற்ப அதிகரித்துச் செல்கின்றன. விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாத அரசு எதற்கு? நாட்டைக் கொண்டுசெல்லும் திறன் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும்."

15

# வடமராட்சியில் மக்களின் வீடுகள் மீது வாள்வெட்டுக் குழு பெரும் அட்டகாசம்

## பல சொத்துக்கள் சேதம்; மூவர் படுகாயம்

வடமராட்சி, ஒக். 12

சட்டவிரோத செயல்பாட்டில் ஈடுபட்டவரைத் தட்டிக் கேட்ட பொதுமக்களின் வீடுகள் மீது சுமார் 50 பேர் கொண்ட வாள்வெட்டுக் குழு மேற்கொண்ட தாக்குதலில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். அத்துடன் 8 வீடுகள், மூன்று மோட்டார் சைக்கிள்கள் சேதமாகப்பட்டுள்ளதுடன் 2 மோட்டார் சைக்கிள்களும் தொலைபேசிகள் சிலவும் கொள்ளையிட்டு

15

# கொரோனா கொத்தணி மீள உருவாகும் அபாயம்!

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் கோவிட் கொத்தணி

15

# மாகாணசபை தேர்தல் குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை

## கூறுகிறார் அமைச்சர் கம்மன்பில

கொழும்பு, ஒக். 12

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடை பெறும் என எதிரணி உறுப்பினர் மனோ கணேசனே அறிவிப்பு விடுத்துள்ளார். தேர்தல் தொடர்பில் அரசாங்கமே தீர்மானிக்கும். எனினும், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

விவசாயி ஒருவர் குதிரை ஒன்றையும் ஆடு ஒன்றையும் வளர்த்து வந்தார். குதிரையும் ஆடும் சிறந்த நண்பர்களாக இருந்து வந்தன. ஒருநாள் அந்தக் குதிரை வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டது. அதனால் அந்த விவசாயி குதிரைக்கு சிகிச்சை அளிக்க மருத்துவரை அழைத்து வந்தார். மருத்துவர் அந்த குதிரையின் நிலையை பார்த்து, நான் மூன்று நாட்கள் வந்து மருந்து தருகிறேன். அந்த மருந்தை சாப்பிட்டு குதிரை எழுந்து நடந்தால் சரி, இல்லையெனில் அதனை கொன்றுவிட வேண்டியதுதான் என்று சொல்லி, அன்றைய மருந்தை கொடுத்துச் சென்றார்.

இவர்களின் உரையாடலை அந்த ஆடு கேட்டுக் கொண்டிருந்தது. மறுநாள், அந்த மருத்துவர் வந்து அன்றைய மருந்தைக் கொடுத்துச் சென்றார். பின் அங்கிருந்த ஆடு, அந்த குதிரையிடம் வந்து, “எழுந்து நட நண்பா, இல்லாவிட்டால் அவர்கள் உன்னை கொன்று விடுவார்கள்”, என்று அந்தக் குதிரையை ஊக்குவித்தது.

மூன்றாம் நாளும் வந்துவிட்டது, மருத்துவரும் வந்து குதிரைக்கு மருந்து கொடுத்துவிட்டு, அந்த விவசாயியிடம், “நாளை குதிரை நடக்கவில்லையெனில், அதனை கொன்றுவிட வேண்டும். இல்லாவிட்டால், அந்த வைரஸ் பரவி, மற்றவர்களுக்கும் பரவிவிடும்”, என்று சொல்லிச் சென்றார்.

அந்த மருத்துவர் போனதும், ஆடு குதிரையிடம் வந்து, “நண்பா! எப்படியாவது எழுந்து நடக்க முயற்சி செய். உன்னால் முடியும், எழுந்திரு! எழுந்திரு!’, என்று சொல்லியது. அந்தக் குதிரையும் முயற்சி செய்து எழுந்து நடந்துவிட்டது.

எதிர்பாராத விதமாக அந்த குதிரையை விவசாயி பார்க்க வரும்போது, குதிரை ஓடியதைப் பார்த்து சந்தோஷமடைந்து, மருத்துவரை அழைத்து அவரிடம் ‘என்ன ஓர் ஆச்சரியம். என் குதிரை குணமடைந்து விட்டது. இதற்கு நிச்சயம் உங்களுக்கு ஒரு விருந்து வைக்க வேண்டும். சரி, இந்த ஆட்டை வெட்டுவோம்!” என்று சொன்னார்.

இந்த கதையில் உண்மையில் குதிரை குணமடைந்ததற்கு அந்த ஆடுதான் காரணம். ஆனால், மருத்துவரின் மருந்தால்தான் குதிரை குணமடைந்தது என்று எண்ணி, கடைசியில் அந்த ஆட்டையே பலி கொடுக்க நினைக்கிறார்கள்.

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன், கிளிநொச்சியில் வயலில் இறங்கி நெல்விதைப்பில் ஈடுபட்ட காட்சியைக் கண்டபோது இந்தக் கதைதான் ஞாபகத்தில் வந்தது.

கிளிநொச்சியில் கூட்டமைப்பின் அடையாளமாக இருப்பவர் சிவஞானம் சிறிதரன். அவரை வெட்டி ஓடி கிளிநொச்சியில் அரசியல் செய்ய சுமந்திரன் புறப்பட்டிருப்பதை அண்மைக்கால சம்பவங்கள் உணர்த்துகின்றன.

கொரோனா முடக்கத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மக்களுக்கு, தன் தோளில் மூட்டைகளைச் சுமந்துசென்று உதவி செய்தபோதும் இந்தப் பத்தியில் அதுபற்றி குறிப்பிட்டிருந்தோம்.

இப்போது வயலில் இறங்கி, கலப்பை பிடித்து நெல்விதைத்து மக்களிடம் தான் ஒரு சாமானியன் என்று காட்ட முயன்றிருக்கிறார் சுமந்திரன்.

ஓர் அரசியல்வாதி அதுவும் தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மாவட்டத்தில் மக்கள் பணியாற்றுவது தவறானது என்று யாரும் சொல்ல வரப்போவதில்லை. ஆனால், தனது வெற்றிக்கு துணைநின்ற ஒருவரை வெட்டி ஓட நினைப்பது சரியானதா என்பதே எம்முன் உள்ள கேள்வி.

தேர்தல் முடிந்து, கூட்டமைப்பின் பேச்சாளர் பதவி பற்றிய சர்ச்சை ஒன்று தோன்றியபோது, பங்காளிக் கட்சிகள் செல்வம் அடைக்கலநாதனை அந்தப் பதவிக்கு நியமிக்க விரும்பியதும், அதனை தலைவர் சம்பந்தனும் ஏற்றுக்கொண்டாரென்றும் கூறப்பட்டது.

அதனை தமிழ் அரசுக்காரர்கள் ஏற்க மறுத்ததும், அதனையடுத்து எழுந்த பரபரப்பும் உச்சக்கட்டத்தில் இருந்த காலம் அது. செல்வத்தை பாராளுமன்றில் சந்தித்தபோது, ‘நான் சிறிதரனுக்கு வாக்குக் கொடத்து விட்டேன். அவர்தான் பேச்சாளராக வேண்டும்’ என்று கூறிய ஒருவர், இன்னமும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருந்துகொண்டு, இப்போது அவரின் கோட்டைக்குள் புகுந்து அரசியல் செய்ய முற்படுவது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துவதை தவிர்க்க முடியவில்லை.!

**- ஊர்க்குருவி**

# யாழ்ப்பாணத்தில் நேற்று 15 தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணத்தில் 15 பேரும், கிளிநொச்சியில் ஒருவருமாக இரு மாவட்டங்களிலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் 76 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையிலேயே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 5 பேரும், காங்கேசன்துறை கடற்படை முகாமில் 5 பேரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 3 பேரும், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் ஒருவர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவருமாக யாழ். மாவட்டத்தில் 15 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

கிளிநெசாச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## இலங்கை வந்தார் இந்திய இராணுவ தலைமை அதிகாரி

கொழும்பு, ஒக். 12

இந்திய இராணுவத்தின் தலைமை அதிகாரி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே நேற்று இலங்கைக்கு வந்தார்.

இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் அழைப்பை ஏற்று ஐந்துநாள் பயணமாக அவர் இலங்கை வந்தார் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தில் அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். (ஐ)

## அசாத் சாலியின் மனு விசாரணைக்கு எடுப்பு

கொழும்பு, ஒக். 12

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தம்மை விடுதலை செய்யுமாறு உத்தரவிடுமாறு கோரி, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

ஜெயந்த ஜெயசூரிய, எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குறித்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டத்தரணிகளின் வாதங்களை அடிப்படையாக முன்வைத்து, அரசமைப்பின் பிரகாரம் 12/1 மற்றும் 13/1 ஆகிய சரத்துகளின் கீழ் மனுவை விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கியது. (ஐ)

## கந்தனின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்துக்கு வந்திருந்த ஒரு யாசகன் என்றே எண்ணியிருப்பர். ஆனால், அந்த ‘யாசகன்’ வேறுயாருமல்ல கந்தனின் அருளையன்றி வேறெதனையும் வேண்டி நிற்காத ஆலய நிர்வாகி குமாரதாஸ மாப்பாண முதலியாரே அந்த ‘யாசகன்’ என்பதை என்னைப்போன்று அவரை யார் என்று தெரிந்தவர்களால் மட்டுமே அறிந்து கொண்டிருக்க முடியும்.

கல்வி tv CHANNEL-1

**12.10.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

கல்வி tv CHANNEL - 2

**12.10.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
12.10.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## விடுதலைப் புலிகளின் சொத்துக்கள்?

நீண்ட காலத்திற்கு பின்னர் கே. பி. எனப்படும் குமரன் பத்மநாதன் பேசியிருக்கின்றார். விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் தொடர்பில் ஊடகவிலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, எந்தவொரு சொத்தும் என்னிடமில்லை. அவர்கள் (விடுதலைப் புலிகள் அமைப்பு) எவ்வாறான சொத்துக்களை விட்டுச் சென்றனர் என்று எனக்கு தெரியாதென்றும் அவர் பதிலளித்திருக்கின்றார்.

12 வருடங்களுக்கு முன்னர், 2009 ஒகஸ்ட் மாதம், கே. பி. மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டபோது, பல சர்வதேச ஆங்கில ஊடகங்களில், விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்றே செய்திகள் வெளியாகிருந்தன.

ஒருவேளை, கே. பி. வெளிநாடு ஒன்றில் தலைமறைவாக இருந்திருந்தால், அவர் உண்மையிலேயே விடுதலைப் புலிகளின் புதிய தலைவராகத்தான் இருந்திருப்பார். இன்றிருக்கும் புலம்பெயர் அமைப்புக்கள் அனைத்தும் அவரின் கட்டுப்பாட்டுக்குள்தான் இருந்திருக்கும். ஏனெனில் கே. பிக்கு உத்தரவிடக் கூடியளவிற்கு வேறு எந்தவொரு தகுதியான மூத்த உறுப்பினரும் உயிரோடு இல்லை. கே. பியால் பிள்ளையார் சுழியிடப்பட்ட நாடு கடந்த அரசாங்கம்தான், இப்போது விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தலைமையில் இயங்கிவருகின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாரன் உயிரோடு இருக்கின்றபோதே, அவரின் கையெழுத்துடன் சர்வதேச விவகாரங்களை கையாளுவதற்காக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட ஒரேயொரு நபரென்றால் அவர் கே. பி. மட்டும்தான். இந்த பின்புலத்தில் நோக்கினாலும், பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் இருப்பதற்கான முழுத்தகுதியும் கே.பிக்கு மட்டும்தான் இருக்கின்றது. ஆனால், இன்று கே. பி. இலங்கை அரசின் கைதி. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்க் குற்றங்கள் விசாரிக்கப்படுமாயின், கே. பியையும் விசாரிக்க முடியும். அப்படியொரு விசாரணை இடம்பெற்றால்.

கே. பி. கைது செய்யப்பட்டபோது, அவரிடம் பெருந்தொகையான பணம் இருப்பதாக ஒரு கதை உலவியது. ஆனால், நாட்கள் வாரங்களாக, மாதங்களாக கழிந்துசென்றபோது, அவரின் கட்டுப்பாட்டின் கீழ் எதுவுமில்லை என்பது தெளிவாகவே தெரிந்தது. ஒருவேளை கே. பியின் கட்டுப்பாட்டில் பெருந்தொகை பணம் இருந்திருந்தால், புலம்பெயர் அமைப்புக்கள் பலவும் கே. பியை விமர்சிக்கவோ, தள்ளிவைக்கவோ துணிந்திருக்காது. கே. பியுடன் இணைந்து பணியாற்றிய பலர் அரசியலிலிருந்தே ஒதுங்கி, தற்போது முகவரியை தொலைத்தவர்களாகவே வெளிநாடுளில் வாழ்ந்துவருகின்றனர். ஒருகாலத்தில், கே. பியுடன் நாங்கள் தொடர்பிலிருந்தோம் என்று சொல்வதையே இப்போது பலரும் விரும்புவதில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளின் பெருந்தொகை நிதி சிலரிடம் முடங்கியிருக்கும் என்பதில் அதிர்ச்சியடைய ஒன்றுமில்லை. அவ்வாறானவர்கள் எவருமே அந்த நிதியை தாயக மக்களின் நல்வாழ்விற்காக வழங்கப் போவதுமில்லை. அப்படியான தமிழ்த் தேசிய பொறுப்புணர்வுடன், அவர்கள் செயல்பட்டமைக்கான எந்தவொரு சான்றையும் இதுவரை காணமுடியவில்லை.

மனிதநேயமுள்ள பல புலம்பெயர் உறவுகள், வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்திருக்கின்றனர். இப்போதும் உதவி செய்து கொண்டிருக்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால், இப்படியான சிறிய உதவிகளை கொண்டு தாயக மக்களை பொருளாதார ரீதியாகத் தூக்கிவிட முடியாது. வடக்கு - கிழக்கின் பொருளாதாரத்துக்கு வலுவான அடித்தளத்தை போட முடியாது. மாகாண சபை நிர்வாகத்தோடு புலம்பெயர் சமூகம் கைகோத்து செயல்பட்டால் பொருளாதார ரீதியில் நல்ல விடயங்களை செய்ய முடியும்.

ஆனால், கடந்த 12 வருடங்களில், புலம்பெயர் அமைப்புக்கள் அல்லது தனிநபர்கள், வடக்கு - கிழக்கில் பெருந்தொகை நிதியில் தொழில் முயற்சிகளை மேற்கொண்டதாக, எந்தவொரு தகவலுமில்லை. பெருந்தொகை என்பது நூறு, இரு நூறு கோடிகளை முதலீடாகக் கொண்ட திட்டங்கள். விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் என்பவை அடிப்படையில் தாயக மக்களின் சொத்துக்கள். அவற்றை கோருவதற்கான முழு உரிமையும் தாயகத்திலுள்ள ஒவ்வொரு தமிழ் குடிமகனுக்கும் உண்டு.

# கந்தனின் அருளையன்றி வேறெதனையும் வேண்டி நிற்காத 'யாசகன்' !

- அனந்த பாலகிட்ணர் -

*1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் 'ஒப்ரேஷன் பவான்' என்ற இராணுவ நடவடிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் ஆரம்பித்திருந்த காலப்பகுதி.*

*மூர்க்கத்தனமான முறையில் கண்மூடித்தனமாக ஆட்லறி தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டவாறு பலாலியிலிருந்து இந்திய துருப்புகள் யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறிய வண்ணமிருந்தன. அச்சமயம், நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலயத்தை அண்டிய பிரதேசங்களை மட்டுமல்ல, யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மக்கள் நல்லூர் கந்தசுவாமி கோயில் கொண்டிருந்த முக்கியத்துவம் காரணமாகவும் அக்கோயிலின் விசாலமான அமைப்பு காரணமாகவும் கோயிலின் உட்பிரகாரத்தினுள் நூற்றுக்கணக்கில் தஞ்சம் புகுந்திருந்தனர்.*

*இதன்காரணமாக அந்தப் பிரமாண்டமான இராணுவ நடவடிக்கையின்போது ஏராளமான அப்பாவி உயிர்கள் இந்திய இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களிலிருந்தும் உயிர் தப்பக்கூடிய வாய்ப்புக் கிடைத்திருந்தது.*

*நல்லூர் ஆலயம் சைவ சமய அனுஷ்டானங்களை பேணி ஆலயத்தின் உள்ளும் புறமும் மிகப்பரிசுத்தமான சூழலை பேணுகின்ற வழிபாட்டுத்தலமாகும். அத்துடன், நேரம் தவறாது ஆலய கிரியைகள் இடம் பெறுவது நல்லூர் கந்தசுவாமி கோயிலின் சிறப்பம்சமாகும்.*

*இவ்வாறு ஆலயத்தின் மகத்துவம் பேணப்பட்டு வருகின்ற சூழலில் எண்ணிலடங்காது திடீரென ஆலயத்தினுள் புகலிடம் தேடிய அப்பாவி மக்கள் ஆலய உட்பிரகார வீதிகளை ஆக்கிரமித்திருந்தனர்.*

*அவ்வாறு நல்லூர் கந்தசுவாமி கோயிலினுள் வந்திருந்தவர்களில் இந்துக்களல்லாத ஏனைய மதத்தவரும் இருந்தனர். அவர்களில பலர் ஆலயத்தினுள் பேணப்படவேண்டிய விதிமுறைகளை புறக்கணித்துமிருந்தனர். இருந்தபோதிலும் கந்தன் ஒரு கருணைத் தெய்வம் என்பதை நிரூபிப்பதுபோல அமைதியாக அனைத்தையும் சகித்துக்கொண்டவராக ஆலயத்தின் மகத்துவத்தை காப்பாற்றி தஞ்சமென்று வந்தோரை பாதுகாக்க வழியமைத்திருந்தார் சில தினங்களுக்கு முன்னர் இறையடி சேர்ந்த நல்லூர் ஆலய நிர்வாகி குமாரதாஸ மாப்பாண முதலியார்.*

*1964ஆம் ஆண்டு நல்லூர் ஆலயத்தின் பத்தாவது நிர்வாகியாக பொறுப்பேற்றார் குமாரதாஸ மாப்பாண முதலியார். அன்றிலிருந்து ஆலயத்துக்கு புது மெருகூட்டி ஓர் ஆன்மீக நிறுவனமாக மாத்திரமல்லாமல், யாழ்ப்பாணத்தின் சைவமும், தமிழும் அழகுற ஏனைய மதத்தவரும் மதிக்கும் விதத்தில் நல்லூர் கந்தன் ஆலயத்தில் இழையோடியிருப்பதை உறுதி செய்தார் குமாரதாஸ மாப்பாண முதலியார்.*

*இலங்கையில் பிரபலம் மிக்க பழமையான கிறிஸ்தவ பாடசாலையாக இருக்கும் யாழ்ப்*



*பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்ற குமாரதாஸ மாப்பாண முதலியாரின் கல்லூரிக் காலம் இலங்கையின் சகல இன, மத, பிரதேசங்களையும் சேர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளில் கல்வி பயின்ற காலப்பகுதியாகும்.*

*ஒரு கிறிஸ்தவ பின்னணியுடன்கூடிய கல்லூரியில் பயின்ற குமாரதாஸ மாப்பாண முதலியார் சிறந்த மேற்கத்தேய பியானோ வாத்தியக் கலைஞருமாவார். அவரின் கலையுணர்வு கட்டடங்களின் வடிவமைப்பாகவும் , இசை நுணுக்கங்களில் கொண்டிருந்த அவரின் அபிமானம் கோயிலின் உட்பிரகாரங்களில் ஒலிக்கின்ற நாதஸ்வரம் உட்பட பல்வேறு வாத்தியங்களூடாக வெளிவருவதை அவதானிக்க முடியும்.*

*சட்டம், ஒழுங்கு என்பவை நிலை தளர்ந்து யாழ்ப்பாணம் அந்தகாரச் சூழலை எதிர்கொண்டிருந்த காலத்தில் நல்லைக் கந்தனிடமே தம்மை பரிபூரணமாக சரணடைய வைத்து மிக அற்புதமாக ஆலய நிர்வாகத்தை குமாரதாஸ மாப்பாண முதலியார் கையாண்டிருந்தார். ஏனைய, ஆலயங்களின் நிவாகிகள் தமது ஆலயங்களுக்கு எவரேனும் பிரமுகர் வருகின்றார் என்றால் மாலையும் கையுமாக முன்னின்று வரவேற்பதை வழக்கமாகக் கொண்டிருப்பர். ஆனால், முருகனைத்தவிர வேறெவருக்கும் கைகூப்பாது தம்மை ஓர் ஆலய ஊழியனாகவே அர்ப்பணித்து எவர் ஆலயத்துக்கு வந்தாலும் அவர்கள் முருகனை வழிபட்டு விட்டுச் சென்றால் போதும் என்ற மனநிலையோடு அடியவர்க்கும் அடியவனாகவே குமாரதாஸ மாப்பாண முதலியார் தம்மை நிலை நிறுத்தி வந்தார்.*

*இரு வருடங்களுக்கு முன்னர் நல்லைக் கந்தன் ஆலயத்துக்கு ஒரு வெள்ளிக்கிழமை பகல் வேளை சென்றிருந்தேன். அப்போது வழிபாடுகளை முடித்து வெளியே வர பிரதான கோபுரவாசலுக்கு வந்தபோது அவ்வாசலின் கதவருகே வெள்ளை வேட்டியுடன் தரையில் குமாரதாஸ மாப்பாண முதலியார் ஒரு யாசகனைப் போல அமர்ந்திருந்தார்.*

*அவரை அறிந்திராதவர்கள் அவர் எளிமையாக எவ்வித ஆரவாரமுமின்றி கோபுர வாசலில் அமர்ந்திருக்கும் விதத்தை நோக்குவார்களேயானால் நிச்சயமாக அவரை*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒக்ரோபர் - 12 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 26
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சப்தமி



## இன்றைய ராசிபலன்

12.10.2021

**மேடம்**
பொறுமைக்குப் பரிசாக நல்ல திருப்பங்கள் உண்டாகும். சுபவிரயங்கள் இன்று ஏற்படும். உங்களின் சேமிப்பு உயரும். ஆரோக்கியத்தில் சிறு தொல்லை ஏற்பட்டு சரியாகும்.

**இடபம்**
பணி சம்பந்தமான சிறு பயணம் மேற்கொள்வீர்கள். தொழிலில் வளர்ச்சி ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. பணியிடத்தில் எதிர்பாராத சந்தோஷ திருப்பங்கள் உண்டு.

**மிதுனம்**
தாயின் உடல் நலம் பற்றி இருந்து வந்த டென்ஷன்கள் அகலும். எதிர்பார்த்த விஷயங்கள் எளி தில் நிறைவேறும். மகிழ்வான நாள். அதிர்ஷ்டம் உண்டு. குடும்பத்தில் சுபவிஷயம் நடைபெறும்.

**கடகம்**
நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். கவலை ஒன்று தீரும். உறவினர் ஒருவரின் அவசரச் செயலால் ஏற்பட்டிருந்த பகை அகலும். வழக்கு ஒன்று சாதகமான திசையை நோக்கிச் செல்லும்.

**சிம்மம்**
உங்களை விட்டு விலகிய ஒருவர் மறுபடியும் ஒன்று சேர முயற்சிப்பார். பொதுவாழ்வில் உங்களுக்கு புதிய அந்தஸ்து கிடைக்கும். நிலம், வீடு சேர்க்கை உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சி.

**கன்னி**
குடும்பத்தில் ஒருவரின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். சகோதர, சகோதரிகளின் கவலை உங்களால் தீர்ந்து நிம்மதி வரும். காத்திருப்போருக்கு இன்று திருமண வாய்ப்புகள் கைகூடும்.

**துலாம்**
பணியிடத்தில் சோம்பல் காரணமாக இருந்த தொய்வு அகலும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள குறுக்கு வழி வேண்டாம். பயணங்கள் அதிகரிக்கும். திட்டம் தீட்டுவதில் கவனம்.

**விருட்சிகம்**
திட்டமிட்டு செய்யும் வேலை ஒன்று வெற்றி அளிக்கும். வாழ்க்கைத்துணையின் மனம் அறிந்து செயல்பட்டு மகிழ்வீர்கள். இன்று சிறு பயணம் ஒன்று மேற்கொள்ளத் தீர்மானிப்பீர்கள்.

**தனுசு**
குடும்பத்தினர் இடையே பாசமும், நேசமும் அதிகரிக்கும். தகுதிக்கேற்ப வேலை கிடைக்கும். விரும்பிய பொருளை வாங்கி மகிழ்வீர்கள். உயர்ந்த பொருளை கவனமாக பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**மகரம்**
வாகன மாற்றம் செய்ய உகந்த நேரம் இது. சம்பள உயர்வும், சலுகைகளும் பெற முயற்சிப்பீர்கள். திட்டமிட்ட விஷயத்தில் வெற்றி கிடைக்க முயற்சி தேவை.

**கும்பம்**
நீங்களாக முன்வந்து வழக்குப் போட வேண்டாம். புதிய விஷயம் ஒன்றை கற்றுக் கொண்டு பலன் அடைவீர்கள். தீய விஷயங்களில் கவனம் செலுத்தாமல் கவனமாக இருங்கள்.

**மீனம்**
புதிய வேலைக்கு முயற்சிப்பதை விட இருப்பதை தக்க வைத்துக்கொள்ளவும். வரு மானங்கள் வரும். சகோதரிகள் நன்மை செய்வர். வருமானத்தைப் பெருக்கும் எண்ணம் தோன்றி வெற்றி.

# புது வேகத்தில் பணியாற்றி ம.தி.மு.கவை மீண்டும் கம்பீரமாக தூக்கி நிறுத்துவேன்

## கட்சிக்காக உயிர் நீத்தோரை நினைவுகூர்ந்து வைகோ உறுதி



சென்னை, ஒக். 12

“புதிய வேகத்துடன் பணியாற்றி ம.தி.மு.க.வை மீண்டும் கம்பீரமாக தூக்கி நிறுத்துவேன்” என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ கூறினார்.

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் தாலுகா கலிங்கப்பட்டியில் வைகோ தனது வீட்டு வளாகத்தில், கட்சிக்காக உயிர்நீத்த நொச்சிப்பட்டி தண்டபாணி, இடிமழை உதயன், மேலப்பாளையம் ஜஹாங்கீர், உப்பிலியாபுரம் வீரப்பன், கோவை காமராஜபுரம் பாலன் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அவர் உரையாற்றிய அவர் முக்கியமாகத் தெரிவித்ததாவது;

“எனது பெயர் கோபால் சாமியை வைகோ என்று மாற்றியவர் கலைஞர் கருணாநிதி. தி.மு.க.வின் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு கட்சியின் நலனுக்காக அயராது பணியாற்றினேன். அரசியலில் நான் சந்தித்த இன்னல்களை மகன் துரை வைகோவும் சந்திக்க வேண்டுமா? என்பதற்காகத்தான் அரசியலுக்கு வர வேண்டாம் என்றேன்.

விடுதலை புலிகள் தலைவர் பிரபாகரனை நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் 2 நிமிடம் கூட சந்தித்தது கிடையாது. தமிழர்களுக்காக ஒன்றுமே செய்யாத சீமானை நம்பி இளைஞர்கள் ஏமாறாதீர்கள். இப்போது அரசியல் வியாபாரமாகி விட்டது.

நான் ம.தி.முகவை மீண் டும் கம்பீரமாக தூக்கி நிறுத்துவேன். கட்சிக்காக நானும், எனது குடும்பத்தினரும் பல இன்னல்களை சந்தித்தாலும், என்னை நம்பி கட்சியில் தொடர்ந்து பயணிக்கும் தொண்டர்களுக்காக மீண்டும் புதிய வேகத்துடன் பணியாற்றி ம.தி.மு.க.வை உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்வேன்” என்றார்.

# ஸ்டாலினை அவதூறாக பேசினாராம் நாம் தமிழர் கட்சியின் பேச்சாளர் கைது



சென்னை, ஒக். 12

தமிழக முதல்வர் ஸ்டாலின் குறித்து அவதூறாக பேசிய குற்றச்சாட்டில் கைதான நாம் தமிழர் கட்சியின் பேச்சாளரான சாட்டை துரைமுருகன் சிறையில் அடைக்கப்பட்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை உடைத்து அதிலுள்ள கற்கள் உள்ளிட்ட கனிம வளங்கள் சட்டவிரோதமாக கேரளாவுக்கு கடத்துவதை கண்டித்து நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சாட்டை துரைமுருகன் முதல்வர் ஸ்டாலினை இழிவுபடுத்தி பேசியிருக்கிறார். தமிழக முதல்வர் குறித்தும் தமிழக அரசை பற்றியும் அவதூறாக பேசியது தொடர்பாக சாட்டை துரைமுருகன் மீது தி.மு.க.வினர் கொடுத்த புகாரின் பேரில் தக்கலை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதோடு நேற்று முன்தினம் நள்ளிரவில், சென்னை நோக்கி சென்று கொண்டிருந்த சாட்டை துரைமுருகனை நாங்குநேரியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அவர் பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை ஒக்டோபர் 25ஆம் திகதி வரை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் அவர் நாம் தமிழர் கட்சியிலிருந்து நீக்கப்படுவதாக சீமான் அறிவிப்பு வெளியிட்டதாக ஓர் அறிக்கை சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

# சிறையிலிருந்து வந்தவுடன் சசிகலா ஏன் ஜெயலலிதா நினைவிடம் செல்லவில்லை?

## கேள்வி எழுப்புகிறார் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்



சென்னை, ஒக். 12

சிறையில் இருந்து வந்தவுடன் சசிகலா ஏன் ஜெயலலிதா நினைவிடம் செல்லவில்லை? என்றும் கேள்வி எழுப்புள்ள அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், உண்மையான கட்சித் தொண்டர்கள் அதிமுகவை விட்டு வேறு எந்த கட்சிக்கும் செல்ல மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொன்விழா கொண்டாட்டங்கள் வருகிற 17 ஆம் திகதி நடைபெறுகிறது. இதையொட்டி சசிகலா 16 ஆம் திகதி மெரினாவில் உள்ள எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா சமாதிகளுக்கு சென்று மரியாதை செலுத்தப் போவதாகவும் 17- ஆம் திகதி ராமாவரத்தில் உள்ள எம்.ஜி.ஆர். இல்லத்திற்கு செல்லப் போவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதன் பிறகு தமிழகம் முழுவதும் தீவிர சுற்றுப்பயணம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதுகுறித்து அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் ஜெயக் குமாரிடம் கேட்டபோது அவர், உண்மையான கட்சித் தொண்டர்கள் அ.தி.மு.கவை விட்டு வேறு எந்த கட்சிக்கும் செல்லமாட்டார்கள் என்று தெரிவித்தார்.

மேலும், சிறையில் இருந்து வந்தவுடன் சசிகலா ஏன் ஜெயலலிதா நினைவிடம் செல்லவில்லை? என்றும் கேள்வி எழுப்பினார். அரசியல் செய்ய வேண்டுமென்பதற்காகவே இதையெல்லாம் செய்வதாகவும் என்ன செய்தாலும் அவர் பின்னால் யாரும் செல்ல மாட்டார்கள் என்றும் அவர் தொண்டர்களால் புறக்கணிக்கப்பட்டவர் என்றும் ஜெயக் குமார் தெரிவித்து உள்ளார்.



## கொழும்பு துறைமுக நகரை டிசெம்பரில் திறக்க தீர்மானம்

கொழும்பு, ஒக். 12

கொழும்பு துறைமுக நகர் இந்த வருடத்தின் டிசெம்பர் மாதத்தில் மக்களுக்காக திறக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் உலக பொருளாதாரத்துறையின் போட்டித்தன்மைக்கான கேந்திரமாக திகழவுள்ள கொழும்புத்துறைமுக நகரம் கடல் நிரப்பப்பட்டு 269 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவின் இந்து சமுத்திர வாயிலாக அமையப்பெற்றுள்ள எழில் மிகுந்த சிறந்த வர்த்தக மத்திய கேந்திரமாக மேற்படி துறைமுக நகரம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

'சைனா ஹாபர் என்ஜினியரிங் கம்பெனி' அதற்கான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் அதன் முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது 99 வீதம் நிறைவடைந்துள்ளதாக துறைமுக நகர இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஒக். 12

இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்கள், பணிபுரியும் ஊழியர்களுக்கு கோவிட் 19 தடுப்பூசி ஏற்றும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.பல்கலைக்கழகத்தில் கோவிட் 19 தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று காலை ஆரம்பிக்கப்பட்டன.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டுதலில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வதியும் வெளியிடப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் ஏற்று தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டனர்.



நேற்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பல்கலைக்கழக சுகநல நிலைய வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.ராஜகுமார் தெரிவித்தார். (அ)

# மாகாணசபை தேர்தலை உறுதிப்படுத்தியது அரசு

*பழைய முறையிலேயே தேர்தல் என்கிறார் பீரிஸ்*



**கொழும்பு, ஒக்.12**

**2022 முற்பகுதியில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளதை அரசாங்கம் நேற்று உறுதிப்படுத்தியது.**

**பழைய முறைமையிலேயே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் எனவும், இதற்கான சட்ட ஏற்பாடுகள் விரைவில் முன்வைக்கப்படும் எனவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.சர்வதேச அழுத்தத்தாலேயே மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளதாக வெளியாகும் கருத்துகளையும் அவர் நிராகரித்தார்.

## தெல்கந்த சந்தியில் விபத்து; சொகுசு கார்-லொறி தீக்கிரை

கொழும்பு, ஒக். 12

தெல்கந்த சந்தியில் அதிசொகுசு காரொன்று ஒரு கோடி ரூபாய் பெறுமதியான பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரு வாகனங்களும் தீக்கிரையாகியுள்ளன என மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

காரின் சாரதி மற்றும் உதவியாளர் இருவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் நாரஹேன்பிட்டி தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கார், வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையால் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இரண்டு அதிசொகுசு கார்கள் தெல்கந்த சந்தியிலிருந்து மஹரகமவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது, முன்னால் பயணித்துக்கொண்டிருந்த கார் வேகத்தை கட்டுப்படுத்த முடியாததால் இடது புறமாக இருந்த சுவரில் மோதியதன் பின்னர் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியின் பின்னால் மோதியுள்ளது.

மோதிய பின் விபத்துக்குள்ளான கார் தீப்பற்றி எரிந்ததாக அந்த பிரதேசத்தை சேர்ந்த மக்களும் அந்த வீதியில் பயணித்தவர்களும் தெரிவித்தனர்.

ஒரு தொகை தொழில்நுட்ப உபகரணங்களை தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்றுக்கு எடுத்து சென்றுக் கொண்டிருந்த லொறியே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பிரதமர்-ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஒக். 12

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஆசிரிய தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பிரதமர் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்தது.

குறித்த சந்திப்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் நாராஹேன்பிட்டி அபயராம விகாராதிபதி, மேல் மாகாண பிரதான சங்கநாயக்கர் வணக்கத்துக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர் என பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமருடனான சந்திப்பின் பின்னர் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தங்களுக்குள் கூடி பேச்சில் ஈடுபட்டன. இது தொடர்பில் விரைவில் அறிவிப்பொன்றை வெளியிடவும் அந்த தொழிற்சங்கங்கள் தயாராகி வருகின்றன.

## பாணின் விலையும் உயர்வு



கொழும்பு, ஒக். 12

ஒரு இறாத்தல் பாணின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்படும் என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் குறித்த விலை அதிகரிப்பு அமுலாகும் என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

## சிற்றுண்டி வகைகளின் விலைகளும் உயர்ந்தன

கொழும்பு, ஒக். 12

சமையல் எரிவாயு சிலிண்டர் வகைகளின் விலை உயர்வை அடுத்து சிற்றுண்டிச்சாலைகளின் உணவு வகைகளின் விலையும் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவிப்பை அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ளது.

மதிய உணவு பொதி, பிரைட் ரைஸ், கொத்து வகைகள் மற்றும் ஒரு பால் தேனீர் ஆகியவற்றின் விலை 10 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது.

## எரிபொருள்களின் விலையை அதிகரிக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 12

எரிபொருள்களின் விலையை அதிகரிக்கவேண்டும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 7ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், இதனால் கூட்டுத்தாபனம் சிக்கல்களை எதிர்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

நெருக்கடியைத் தவிர்க்க எரிபொருள் விலையை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க கூறினார்.

எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு வலுசக்தி அமைச்சருக்கும் தமது சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## இறக்குமதி செய்யப்பட்ட பால்மா புதிய விலையில் விற்பனைக்கு!

கொழும்பு, ஒக். 12

துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட பால்மா தொகை நேற்று முதல், புதிய விலையில் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகப் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மா பொதியின் புதிய விலை 1,195 ரூபாயாகும்.அதேநேரம், இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால்மா பொதியின் புதிய விலை 480 ரூபாயாகும்.

ஈழநாடு



# மு.காவின் தலைமையை மாற்ற இரகசிய நகர்வு!

## முன்னாள் எம்.பிக்கள், மாகாண சபை உறுப்பினர்கள் இணைந்து இந்த திட்டம்

கொழும்பு, ஒக்.12

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீமை கட்சித்தலைவர் பதவியிலிருந்து அகற்றி புதிய தலைவர் ஒருவரை கொண்டுவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இரகசிய முன்னெடுப்புகளை அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர், மாகாண முன்னாள் உறுப்பினர்கள் சிலர் மேற்கொண்டுள்ளனரென செய்திகள் வெளியாகியுள்ளன.**

இதற்கான இரகசியப் பேச்சுகள் சில தினங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தின் பிரசித்தி பெற்ற நகர் ஒன்றில் இடம்பெற்றுள்ளன.

கட்சித்தலைவரின் செயல்பாடுகள், கட்சியின் கட்டுக்கோப்பை மீறி செயல்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமை, கிழக்கு மாகாண சபை தேர்தலுக்கு முன்னாள் உறுப்பினர் தவத்தை, முதலமைச்சர் வேட்பாளராக நியமிப்பது தொடர்பான கட்சியின் உத்தேசம் உட்பட்ட விடயங்களை முன்வைத்து அந்தக் கட்சியின் தலைவருக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

# அனுபவம் இல்லாத ஆட்சியாளர்களால் இலங்கை கடுமையான நெருக்கடியில்!

## கயந்த கருணாதிலக குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 12

அனுபவம் இல்லாத தலைவர்கள் ஆட்சிபீடமேறுவதால் முழு நாடும் பாழாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அஹூன்கல்ல, பொல்ஹதுபலாதே கடவரகந்த பிரதேசத்தில் இடம்பெற்ற விவசாயிகளின் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் எந்தவொரு அரசாங்கமும் செய்யாத வகையில் முட்டாள்தனமாக முடிவெடுத்த அரசாங்கம் என்று இந்த அரசு வரலாற்றில் எழுதப்படும். நாடு பூராகவுமுள்ள விவசாயிகள் இரசாயன உரத்தை பெற்றுக்கொடுக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். சிறந்த வருமானத்தை பெற்றுத்தந்த கறுவா பயிர்ச்செய்கை ஒரு வருட காலமாக உரமின்றி அழிவை சந்தித்துள்ளது.

அனுபவமில்லாத தலைவர்களினாலேயே நாடு இந்நிலையை சந்தித்துள்ளது. நடைமுறை அனுபவமுள்ள விவசாயிகளின் ஆலோசனைகளை அரசாங்கம் கேட்பதாக இல்லை.

சேதனப் பசளையை வைத்து கறுவாவை பயிரிட முடியாது. கறுவா பயிர்ச்செய்கைக்காக இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுப்பதாக தெரியவில்லை. மக்களை கஷ்டத்துக்குள்ளாக்கும் செயற்பாடுகளையே இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது-என்றார்.

# அரசும் அமைச்சுகளும் பாராமுகம் மீனவர்கள், விவசாயிகள் பாதிப்பு!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 12

மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாக அரசாங்கமும்,உரிய அமைச்சுக்களும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் விவசாயிகளும், மீனவர்களும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பிற்பாடு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இரசாயனப் பசளையை நிறுத்தி சேதன பசளை மூலம் இலங்கையில் உற்பத்தியை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டார்.

ஆனால், குறித்த முயற்சி முழுமையாக தோல்வியடைந்து விவசாயிகள் தற்போது வீதியில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது சேதனப் பசளையும் இல்லை. விவசாயிகள் நெல் விதைக்கும் ஆரம்ப காலப் பகுதியில் பசளை இல்லாமல் எவ்வாறு விதைப்பது என்று உள்ளனர். விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்து வருகின்றனர்.

நாட்டில் உள்ள விவசாய அமைச்சு விவசாயிகளுக்கு பசளையை கொடுத்து உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து நாட்டு மக்களுக்கு அரிசி வழங்க முயற்சி எடுப்பதா? அல்லது பசளையை நிறுத்தி வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து மக்களுக்கு வழங்கி விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதா?

தற்போது அரசாங்கம் அரிசியின் விலையை குறைப்பதற்கு அல்லது அவர்கள் தங்களுடைய சொந்த இலாபத்துக்காக அரிசியை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளார்கள்.

விவசாயிகளுக்கு பசளையை வழங்கி இருந்தால் அரிசி இறக்குமதி செய்யவேண்டிய தேவை இல்லை. எனவே அரசாங்கம் உடனடியாக விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கை-இந்திய மீனவர்களுக்கிடையில் தொடர்ச்சியாக பிரச்னைகள் இடம் பெற்று வருகின்றன. யுத்தத்துக்கு பிற்பாடு இந்திய இழுவைப்படகுகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக இலங்கையின் வட கடல் பகுதிக்குள் அவர்களின் மீன்பிடி ஆதிக்கம் காணப்படுகின்றது.

இந்தியாவின் இழுவைப்படகுகளினால் இலங்கையில் தமிழ் பகுதிகளில் உள்ள மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் இலங்கை அரசு காத்திரமான எந்தவொரு செயல்பாட்டையும் முன்னெடுக்கவில்லை.

கடந்த அரசாங்கத்தில் இருந்தபோது எங்கள் தொடர்ச்சியான அழுத்தங்களால் பல இந்திய படகுகள் பிடிக்கப்பட்டுள்ளதோடு கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

ஆனால் தற்போது மன்னார், முல்லைத்தீவு மீனவர்கள் பாதிக்கும் அளவுக்கு இந்திய இழுவைப் படகுகள் வந்து செல்கின்றன.

கடற்றொழில் அமைச்சரும், அரசாங்கமும் இவ்விடயத்தில் மௌனம் காத்து வருகின்றனர்.

இதற்கு பிரதானமான காரணம் இந்தியாவுக்கு பயந்து அவர்கள் முடிவுகளை எடுக்கத் தயங்குகிறார்கள். இவ்விடயம் தொடர்பில்கடற்றொழில்அமைச்சரிடமும் நான் நேரடியாக தெரிவித்துள்ளேன்.

அரசாங்கத்திடமும் பலமுறை பாராளுமன்றத்தில் கதைத்துள்ளேன். ஆனால் இவ்விடயத்தில் கடற்றொழில் அமைச்சும் அரசாங்கமும் எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

அண்மைக்காலமாக மிக மோசமாக இந்திய இழுவைப் படகுகள் வந்து வட கடலில் உள்ள எமது மீனவர்களின் வலைகளையும்,படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் சேதப்படுத்திச் சென்றுள்ளன.

இதனால் எமது மீனவர்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விடயத்தில் கடல் தொழில் அமைச்சு மௌனமாக இருப்பதை விட கடல்தொழில் அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்து ஒரு சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் கடல் தொழில் அமைச்சராக நியமிக்கப்படவேண்டும்.

வட மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் கடல் தொழில் அமைச்சராக இருந்தும்கூட வடமாகாண மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் நிலையில் அவர் மௌனமாக இருப்பதை விட சிங்களவர் ஒருவர் கடற்றொழில் அமைச்சராக இருந்தால் எமது அழுத்தத்தின் காரணமாக நிலைமையை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்-என்றார். (அ)

# நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளருக்கு மிரட்டல்!

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

கொழும்பு, ஒக். 12

நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன, தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை முதல் தனது இல்லத்தை சுற்றி அடையாளம் தெரியாத குழுவொன்று வெள்ளை வானில் சுற்றிவருவதாக கூறியே அவர் இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.

மேலும், கடந்த வியாழக்கிழமை வெள்ளை வானில் வந்த சிலர் தனது வீட்டு இலக்கத்தை பார்த்துவிட்டு, இதுதான் வீடு எனத் தெரிவித்த வண்ணம் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர் என அயலவர்கள் சிலர் தன்னிடம் தெரிவித்தாகவும், எனவே தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும், தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள தாக இரகசிய பொலிஸாரிடம் தான் ஏற்கனவே முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும், ஆனால் விசாரணைகளுக்காக தனக்கு அழைப்பு விடுக்கவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிரூபமாவிடமும் விசாரணை



கொழும்பு, ஒக். 12

பண்டோரா பேப்பர்ஸ் சர்ச்சையில் சிக்கியுள்ள முன்னாள் அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷவை விசாரணைக்கு அழைக்க இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டன் சென்றுள்ள அவர் விசாரணைக்கு வருகை தராவிட்டால் சர்வதேச பொலிஸார் ஊடாக அவரை இலங்கைக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டோரா பேப்பரஸ் வெளியிட்ட தகவலுக்கு அமைய, சட்டவிரோதமாக வெளிநாடுகளில் கோடிக்கணக்கில் சொத்துக்களை குவித்துள்ள பிரபலங்களின் பட்டியலில், முன்னாள் அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ, இவரது கணவர் திருக்குமார் நடேசன் ஆகியோரின் பெயரும் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நிரூபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசன் பல இரகசிய நிறுவனங்கள் மூலம் செய்த பரிவர்த்தனைகள் குறித்த தகவல்களும் பண்டோரா பேப்பரஸ் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதற்கிணங்க, 2011 ஆம் ஆண்டு நிலவரப்படி திருக்குமார் நடேசனின் சொத்துக்களின் பெறுமதி 160 மில்லியன் டொலர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயங்கரவாத தடை சட்ட திருத்தம் குறித்து பிரிட்டன் தூதுவருடன் சரத் வீரசேகர பேச்சு

கொழும்பு, ஒக். 12

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்தம் செய்வது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுக் கும், பிரிட்டன் தூதுவர் சரா ஹல்டனுக் கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற் றுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் பிரிட்டன் மற்றும் இலங்கைக்கு இடையில் நிலவும் நீண்ட கால உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களில் இரு நாடுகளிலும் அதன் பிரதிநிதிகளை அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ள தாகப் பொது மக்கள் பாது காப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.



# மாதகல் குசுமந்துறை மீனவரின் படகை எரித்து விசமிகள் அடாவடி

யாழ்ப்பாணம், ஒக். 12

மாதகல்-குசுமந்துறை கடற்கரையில் மீனவரின் படகை இனந்தெரியாத நபர்கள் தீயிட்டு கொழுத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

மாதகல் குசுமந்துறைக் கடலில் தொழிலில் ஈடுபடும் குறித்த படகு கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் தீ மூட்டப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நட்சத்திர ஆமைகளுடன் மூன்று பேர் கைதாகினர்

கொழும்பு, ஒக். 12

அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் 223 நட்சத்திர ஆமைகளை வைத்திருந்த இந்தியர்கள் இருவர் உள்ளிட்ட மூவரை நீர்கொழும்பு பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொப்பராஹந்திய என்ற இடத்தில் நான்கு மாடி வீடொன்றிலேயே ஆமைகள் வைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆமைகளை வைத்திருந்த இந்தியர்கள் இருவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவை பிறிதொரு இடத்துக்கு எடுத்துச் செல்லத் தயாராக வைக்கப்பட்டிருந்ததாக சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து ஆமைகளை கொண்டு செல்வதற்காக அவ்விடத்துக்கு வருகைதந்த லொறியொன்றும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டதுடன் அதன் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் முல்லேரியாவவைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரும் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஒக். 12

புத்தளம்- முந்தளம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு உடன் இடமாற்றம் வழங்குமாறு, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுள்ளார் என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரி பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு வருவதன் காரணமாக அவருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்குமாறும் அவர் கேட்டுள்ளாரென அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் அதிகாரியிடம் கேட்டபோது, ஆராச்சிகட்டுவ பிரதேசத்தில் உள்ள காணியொன்றில் டோசர் இயந்திரத்தை பயன்படுத்தி மண் வெட்டும் பணி தொடர்பில் தான் சட்டத்தை அமுல்படுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சிலர் இவ்வாறு தனக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.




# வடக்கு சுகாதார சேவைகள் பணிமனையை முற்றுகையிட்டு பணியாளர்கள் போராட்டம்

## நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி

**யாழ்ப்பாணம், ஒக்.12**

**வடக்கிலுள்ள சுகாதார பணியாளர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி போராட்டம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை முன்னெடுத்தனர். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையை முற்றுகையிட்டு, அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

கடந்த இரண்டு வருடங்களாக தற்காலிக சுகாதார உதவியாளராக யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய 62 பேருக்கு, சுகாதார அமைச்சின் நிரந்தர நியமனக் கடிதங்கள் சில தினங்களுக்கு முன்பு வழங்கப்பட்டதை எதிர்த்தே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக இருந்து பேரணியாக புறப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், பண்ணையில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையை முற்றுகையிட்டு, போராட்டத்தில் ஈடுபட்டு நியாயம் கோரினர்.

மேலும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் இந்த இடத்துக்கு வரவேண்டும், நீதியை எமக்குத் தரவேண்டும், எமக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்து போன்ற கோரிக்கைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களாக எழுப்பினர்.

இதன்போது, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் தற்போது பொறுப்பான அதிகாரிகள் இல்லை என்றும் அதே நேரம் பிறிதொரு தினத்தில் அதிகாரிகளை சந்திப்பதற்கு ஒழுங்கு செய்து தருவதாகவும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார்.

அந்த உத்தியோகத்தர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சுகாதார அமைச்சு எந்தவிதமான நியமனங்களையும் தற்போது வழங்கவில்லை. மத்திய அரசு வழங்கும் நியமனங்களுக்கு நாங்கள் எந்த வகையிலும் பொறுப்பு கூற முடியாது. அதற்கு பதில் வழங்கவேண்டியது ஆளுநரே-என்றார்.

இதனை ஏற்க மறுத்த சுகாதாரப் பணியாளர்கள், நாங்கள் நீண்ட காலமாக பணியாற்றி நிரந்தர நியமனத்துக்காக காத்திருக்கும்போது எம்மை தவிர்த்துவிட்டு தற்போது வந்தவர்களுக்கு நியமனத்தை வழங்குவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தொடர்ந்து ஏமாற்று வார்த்தைக்கு இணங்க முடியாது என்றும் உடனடியாக நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்தக் கோரியும் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# சம்பள உயர்வு கோரி மக்கள் விரைவில் வீதிக்கு இறங்குவார்கள்



கொழும்பு, ஒக். 12

பால்மா, சமையல் எரிவாயு, கோதுமை மா உள்ளிட்ட பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எனவே, சம்பள உயர்வு வழங்குமாறு கோரி மக்கள் வீதிக்கு இறங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு நடைபெறும் போராட்டங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம், அவசரகால சட்டத்தை பயன்படுத்தக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# அடித்து விரட்டப்படுவீர்கள்!

## அரசியல்வாதிகளுக்கு எதிராக பருத்தித்துறை மீனவர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 12

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகள் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடியைக் கட்டுப்படுத்தாமல் எந்தவோர் அரசியல்வாதியும் பருத்தித்துறை முனை எல்லைக்குள் பிரவேசிக்கவேண்டாம் என்று உள்ளூர் கடற்றொழிலாளர் சமூகம் கேட்டுள்ளது.

தமது கோரிக்கையை நிறைவு செய்யாது மீறி தமது எல்லைக்குள் வரும் அரசியல்வாதியும் அடித்து விரட்டப்படுவார்கள் என்று அந்த சமூகம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர் சங்க மண்டப முகப்பில் இடம்பெற்ற கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது வெளியிடப்பட்டது. (அ-2)





# மாகாண சபை தேர்தலை நடத்த தாண்ட வேண்டியுள்ள தடைகள்

## விரைவில் நடத்த இந்திய தரப்பு அழுத்தம்?

**ரஞ்சன் அருண் பிரசாத்**

இலங்கையில் மூன்று முதல் ஐந்து வருட காலமாக வலுவிழந்துள்ள மாகாண சபைகளை, வலுப்படுத்தும் வகையில், மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட ஆரம்பித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியத் தரப்பில் அழுத்தங்களை பிரயோகிக்குமாறு, இலங்கை சென்றிருந்த இந்திய வெளியுறவுச் செயலருக்கு, இலங்கையின் சில கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. எனினும், இந்திய அரசின் அழுத்தத்தால் தேர்தல் நடத்தும் முடிவு எடுக்கப்படவில்லை என்று இலங்கை அரசு மறுப்பு தெரிவிக்கிறது.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களுக்காக ஆயுட்காலம் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. அத்துடன், வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆயுட்காலம் நிறைவடைந்து நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில், ஊவா, மேல் மற்றும் தென் மாகாணங்களின் ஆயுட்காலம் நிறைவடைந்து மூன்று வருடங்கள் ஆகின்றன.

கடந்த அரசாங்கமான 'நல்லாட்சி' காலப் பகுதியிலும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது போன பின்னணியில், தற்போதைய அரசாங்கத்தினாலும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலைமை காணப்பட்டது. மாகாண சபைத் தேர்தல் முறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் மற்றும் கோவிட் பரவல் ஆகிய காரணங்கள், மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கான காரணியாக அமைந்திருந்தது. குறிப்பாக மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதிலும், மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருந்தது.

கடந்த அரசாங்கத்தினால் மாகாண சபை திருத்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமையினால், தேர்தலை நடத்தாத பிரதான காரணமாக அமைந்திருந்தது. இந்த சட்டமூலம் 2017 ஆம் ஆண்டு செப் டம்பர் மாதம் 22ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

விகிதாசார மற்றும் கலப்பு முறையில் மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்வது, பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், தேர்தல் தொகுதிகளை வரையறுப்பதற்காக எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானம் தோற்கடிக்கப்பட்ட பின்னணியிலேயே, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### மாற்று திட்டங்கள்

மாகாண சபைத் தேர்லை நடத்துவதற்கு இரண்டு மாற்று திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. எல்லை நிர்ணயத்தை நிறைவு செய்து, அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி, மாகாண சபைத் தேர்தலை நடத்துதல்.

2. புதிய சட்டமூலமொன்றின் ஊடாக, பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தலை நடத்துதல்.

தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பிலான விசேட நாடாளுமன்ற தெரிவுக் குழு அண்மையில் கூடியுள்ளது. இதன்படி, குறித்த இரண்டு யோசனைகள் தொடர் பில், தேர்தல் மறுசீரமைப்பு தொடர் பிலான விசேட நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, சட்ட மாஅதிபரின் நிறைப் பாட்டை கோரியுள்ளார். சட்டமொன்றை நிறைவேற்றாமல், பழைய முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என சட்ட மாஅதிபர், தெரிவுக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஏனைய கட்சிகளுடன் க லந்துரையாடல்களை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### பழைய முறையில் தேர்தல்?

மாகாண சபைத் தேர்தலை பழைய முறைப்படி நடத்துவதற்கு தற்போது பல கட்சிகள் இணக்கம் வெளியிட்டு வருகின்றன. இந்த நிலையில், எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் விவாதிக்கப்படவுள்ளமையினால், வரவு செலவுத்திட்ட விவாதம் நிறைவடைந்ததன் பின்னர், தேர்தலை நடத்துவது தொடர்பிலான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் டிசெம்பர் அல்லது ஜனவரி மாதங்களில் பழைய முறையில் தேர்தலை நடத்துவது தொடர்பிலான புதிய சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சட்டமூலம் நிறைவேற்றப்படும் நாள் முதல், எதிர்வரும் ஓரிரு மாதங்களில் தேர்தலை நடத்த கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். எதிர்வரும் ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்திற்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்ற நிலைப்பாட்டிற்கு அனைத்து கட்சிகளும் ஏகமனதாக இணக்கம் வெளியிட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

### கூட்டமைப்பின் நிலைப்பாடு

சிறிய சட்ட திருத்தத்தின் ஊடாக, பழைய முறையின் பிரகாரம், மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என தான் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்..ஏ.சுமந்திரன் தெரிவிக்கின்றார்.

இந்த சட்ட திருத்தம் தொடர்பிலான சட்டமூலமொன்றை தான் 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தான் சமர்ப்பித்திருந்ததாக அவர் கூறுகின்றார். பழைய முறையின் பிரகாரம், தேர்தலை நடத்த முடியும் என்ற விதத்தில் சட்ட மாஅதிபர் பதிலளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். இதேவேளை, தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பிலான விசேட பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்திற்கு வருகைத் தந்திருந்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என தெரிவித்திருந்தா கவும் அவர் கூறினார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தமக்கு பல அழுத்தங்கள் காணப்படுவதாக அன் றைய கூட்டத்தில் பஸில் ராஜபக்ஷ தெரி வித்திருந்ததாக எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர், இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு, தனது விஜயத்தை நிறைவு செய்த பின்னணியிலேயே, அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்த அறிவிப்பை வெளியிட்டதாகவும் அவர் கூறினார்.

பழைய முறையின் பிரகாரம், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால், அதனை தாம் முழுமையாக வரவேற்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவிக்கின்றார். இந்திய வெளியுறவுத் துறை செயலாளரினால் இலங்கைக்கு விடுக்கப்பட்ட அழுத்தங்களே, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கான காரணம் என அவர் கூறினார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை அரசாங்கம் எட்டியதன் பின்னணியில், 100 வீதம் இந்தியாவின் அழுத்தம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அத்துடன், அண்மையில் நிறைவடைந்த ஐ.நா பொதுச் சபை கூட்டத்தின் போதும், இதற்கான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக வீ.இராதாகிருஷ்ணன் கூறுகின்றார்.

### இந்தியாவிடம் கோரிக்கை

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ் வர்தன ஷ்ரிங்லாவின் இலங்கை விஜயத்தின் போது, அவரை அதிகாரபூர்வமாக சந்தித்த தமிழ் கட்சிகள், மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த இலங்கை மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமை மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இந்த கோரிக்கையை இந்தியாவிடம் விடுத்திருந்தனர்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரங்களை பகிர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது குறித்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ் வர்தன ஷ்ரிங்லா வலியுறுத்தியதாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ் வர்தன ஷ்ரிங்லாவின் இலங்கை விஜயத்தின் பின்னர், இந்திய உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### அமைச்சர் பீரிஸ் மறுப்பு

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா எந்தவிதத்திலும் அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை என வெளிவிகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிக்கின்றார். கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் தேர்தலை எவ்வாறு நடத்துவது, எந்த முறையில் நடத்துவது என்பது குறித்து இலங்கை பாராளுமன்றமே தீர்மானிக்கும் எனவும் அவர் கூறினார்.

புதிய சட்டமூலமொன்றை கொண்டு வந்து, அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது என வெளிவிகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவது குறித்து அரசாங்கம் இதுவரை தமக்கு அறிவிக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத் தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர், மாகாண சபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கம் மற்றும் பாராளு மன்றம் வசமானது எனவும் அவர் கூறு கின்றார்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னரே, தமக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பிலான தீர்மானங்களை எடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், நாட்டின் கோவிட் நிலைமை உள்ளிட்ட விடயங்களை ஆராய்ந்ததன் பின்னரே, தமக்கு தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை எட்ட முடியும் என வும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சி ஹேவா தெரிவித்தார். ■

# ஐரோப்பிய குழுவின் வருகையும் பயங்கரவாத தடை சட்டமும்

**பனங்காட்டான்**

இலங்கை அரசியலைப் பொறுத்தளவில் இந்த நாட்கள் இரண்டு விவகாரங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அமெரிக்க விஜய ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உரையாற்றுகைக்குப் பின்னராக இந்த நாட்கள் அமைந்தன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புக் குழுவினரதும், இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஸ் வர்தன் ஸ்ரிங்லாவினதும் சமகால பயணங்களே இந்த முக்கியத் துவங்கள். இவையிரண்டும் பிளஸ் சம்பந்தப்பட்டவை. ஒன்று, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை. அடுத்தது 13 பிளஸ் அரசியல் தீர்வு.

ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணையத்தின் 46ஆவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட 46:1 தீர்மானத்துக்குச் சமாந்தரமாக, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்கான நிபந்தனையை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு அறிவித்தது.

1968 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காவிட்டால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் ரத்துச் செய்யும் அறிவிப்பு இது.

27 நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் 703 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுள் 628 பேர் இலங்கைக்கான வரிச்சலுகையை ரத்துச் செய்யும் முடிவுக்கு ஆதரவளித்தனர். அரசியல் - பொருளாதார செயல்பாடுகளை மையமாகக் கொண்ட ஒன்றியம் என்னும் வகையில் இதன் முடிவு முக்கியமானது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென்ற முடிவை ஒன்றியம் முன்னிறுத்தியதும், இலங்கை அரசு தனது வழமையான பாணியில் இதனை ஆராயவென ஒரு குழுவை நியமித்தது. இக்குழு தனது அறிக்கையை குறுகிய காலத்தில் கோதபாயவிடம் கையளித்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சில பிரிவுகளை மாற்றியமைக்கவும், பிரித்தானியாவில் நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அமைவாக இதனை மாற்றியமைக்கவும் இக்குழு பரிந்துரைத்தது. சட்டத்தை நீக்க பரிந்துரை செய்யவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தை மட்டுமன்றி ஜெனிவாவையும் பேய்க்காட்டும் ஒரு செயற்பாடே இது என்பது அனைவருக்கும் தெரியும். இருந்தும் ஒன்றியத்தின் விசேட குழுவொன்று இலங்கை சென்று பல்வேறு தரப்பினரையும் சந்தித்தது.

ஆட்சியாளர்கள், எதிரணியினர், அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகளுடன் மட்டுமன்றி, காணாமலாக்கப்பட்டோர் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்தித்தது முக்கியமாகப் பார்க்கப்பட்டது. இலங்கைக்கு வரிச்சலுகையை வழங்குவதற்கு முன்னர் மனித உரிமைகள் விடயங்களை முக்கியப்படுத்த வேண்டுமென இவர்கள் கோரியதாக ஊடகங்களில் செய்தி வெளியானது.

இறுதியில் எதிர்பார்க்கப்பட்டவாறு, அடுத்த ஆறு மாதங்களை இலங்கைக்கு காலக்கெடுவாக ஒன்றியம் வழங்கியுள்ளது. கோதபாயவும் அவரது அணியினரும் வழங்கிய - முன்னேற்ற உறுதிப்பாடுகளை நம்பியே இந்தக் காலஅவகாசம் வழங்கப்பட்டது.

வரிச்சலுகை ரத்தாகுமானால் ஏற்கனவே அதலபாதாளத்திலுள்ள இலங்கையின் பொருளாதாரம் அதற்கும் அப்பால் - இதிலும் பிளஸ் நிலைக்குச் சென்றுவிடும்.

வழங்கப்பட்டுள்ள காலஅவகாசம் என்பது - மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வு இடம்பெறவுள்ள 2022 மார்ச் மாதத்துடன் அமைவது இங்கு கவனிக்கப்பட வேண்டியது. அடுத்த ஏப்ரல் மாதம் இலங்கையைப் பொறுத்தளவில் ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகையில் கண்டமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திருத்தப்பட்ட பயங்கரவாத சட்ட தயாரிப்பு, அநுராதபுரம் தமிழ் அரசியல் கைதிகளை தமிழர் பகுதிகளுக்கு இடம் மாற்றுவதென ஆராய்வது, சிறிய எண்ணிக்கை அரசியல் கைதிகளை பிணையில் விடுதலை செய்ய ஆலோசிப்பது என்பவை இப்போதைக்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு நம்பிக்கையூட்டும் செயற்பாடுகள்.

இலங்கையில் ராணுவ ஆட்சி தொடர வேண்டுமானால் அதற்கு அவசரகால சட்டமும் பயங்கரவாதத் தடைச்சட்டமும் நகமும் தசையுமாக இருக்க வேண்டுமென்ற நிலையில், கோட்டாபய அரசு எவ்வாறு இதனை முற்றாக அகற்றும்! அடுத்த சில மாதங்கள் இதற்கு விடை தரும்.

ஐரோப்பிய ஒன்றிய சிறப்புக் குழு தனது களவிஜயத்தை முடித்துக் கொண்டிருக்கையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஸ் வர்தன் ஸ்ரிங்லாவின் இலங்கைக்கான அட்டகாச விஜயம் ஆரம்பமானது. அட்டகாச என்ற அடைமொழியுடன் இதனை ஆரம்பிப்பதற்கு காரணமாக அமைவது இவர் கொழும்புடன் தமது பயணத்தை முடித்துவிடாது தமிழரின் பூர்வீக நிலமான வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு பயணித்ததையும், சுட்ட மண்ணும் சுடாத மண்ணுமாக இயங்கும் தமிழர் தரப்பினரை சந்தித்ததையும், அவர்களுக்கு இந்திய நிலைப்பாட்டை விளக்கியதையும், அவர்களின் கருத்தை அமைதியாக உள்வாங்கியதுமே தான்.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் இலங்கை சென்ற இந்திய ஆளும் தரப்பினர் குறிப்பிட்ட சில குழுவினரை மட்டுமே சந்திப்பதும், அதற்கு ஏதுவாக அறிக்கை விடுவதும் வழக்கம்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் சில மாதங்களுக்கு முன்னர் அங்கு சென்ற போதும் வழமையான பாணியிலேயே அவரின் சந்திப்புகளும் இருந்தன. அந்த வகையில் ஹர்ஸவர்தனின் விஜயம் சற்று வேறுவிதமாக இருந்தது. இதற்குக் காரணமும் இருந்தது.

மைத்திரி - ரணில் ஆட்சியில் அவர்களின் கூட்டாளிகளாக (பெயரளவில் எதிர்க்கட்சியாக இருந்தும்) இயங்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இந்திய பிரதமர் மோடியை எட்டவே வைத்திருந்தனர். அந்த நாலரை ஆண்டில் ஒரு தடவைதானும் இந்தியப் பிரதமருக்கு கடிதம்கூட கூட்டமைப்பு எழுதவில்லை.

மேற்கு நாடொன்றின் பிரதிநிதியாக கூட்டமைப்புக்குள் புகுத்தப்பட்டவரின் வழிநடத்தலில், மைத்திரி - ரணில் ஆட்சியில் புதிய அரசியலமைப்பு வருமென்றும், பிளவுபடாத இலங்கைக்குள் தமிழருக்கு தீர்வு உண்டென்றும் அவர் கொடுத்த அறுத்த கயிற்றில் தொங்கிய கூட்டமைப்பின் தலைவர், இந்தியாவை அப்போது புறக்கணித்தே வந்தார்.

இதன் எதிரொலியாக, அவ்வேளை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் மோடி கூட்டமைப்பினரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஒரு நிமிடம் மட்டும் சந்தித்துவிட்டு, டில்லிக்கு வாருங்கள் பேசுவோம் என்று சொல்லிப் போனாரே தவிர, இவர்களை அங்கு அழைக்கவேயில்லை.



**“ 13ஆவது திருத்தம் இல்லையென்றால் இந்தியாவுக்கு இலங்கையுடன் பேச்சு நடத்தவும், தமது சில தேவைகளை நிறைவேற்றவும், இலங்கைக்குப் பயணங்களை மேற்கொள்ளவும் போதிய காரணமில்லாமல் போய்விடுமென்பது தமிழருக்குத் தெரியாததல்ல. இலங்கையால் புறக்கணிக்கப்பட்டுவரும், புளிச்சுப்போன 13 என்பதை கேட்டுக்கேட்டே தமிழருக்கு அலுத்துப் போய்விட்டது!**

இதன் இன்னொரு பிரதிபலிப்பாகவே, இந்திய வெளியுறவுச் செயலாளர் யாழ்ப்பாணம் சென்று கூட்டமைப்பினருக்கு விருப்பமற்ற விக்னேஸ்வரனின் கூட்டணி, கஜேந்திரகுமாரின் முன்னணியினரை இரவு விருந்துடன் சந்தித்து உரையாடினார். இச்சந்திப்பில் மாகாண சபையின் அவைத் தலைவரையும், இலங்கை அரசின் குடாநாட்டு அதிகாரிகளையும் இணைத்துக் கொண்டது இந்தியாவின் இராஜதந்திரம்.

கூட்டமைப்பினரை தனியாக கொழும்பில் சந்தித்து உரையாடினார். கூட்டமைப்புடனான சந்திப்பின்போது வெளியுறவுச் செயலாளர் விடுத்த ஒரு வேண்டுகோள் காலத்துடன் பொருந்தியதாகவுள்ளது. தமிழரின் அரசியல் தீர்வு விடயத்துக்கான 13 ஆவது திருத்த அடிப்படையில் மாகாண சபை முறைமையை நிறைவேற்ற வேண்டிய விடயத்திலாவது, ஆகக்குறைந்தது தமிழர் தரப்புகள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டுமென்பதே இவரது வேண்டுகோள்.

இந்த வேண்டுகோள் பொதுநோக்கு அடிப்படையில் நீண்ட காலமாக தமிழ் மக்களிடையே இருந்து வருகிறது. இந்த ஒன்றிணைப்பை குழப்புபவர்களாக புலம்பெயர்ந்த தமிழரின் சில அமைப்புகள் இருப்பதாகவும் அண்மையில் குறை கூறப்பட்டு வருகிறது.

கூட்டமைப்பினரைச் சந்தித்தபோது மட்டும் இந்த வேண்டுகோளை இந்திய வெளியுறவுச் செயலாளர் முன்வைத்தார். அப்படியானால், தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை கூட்டமைப்பினரே குழப்புகிறார்கள் என்று இந்தியா கருதுகிறதா?

கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட வேளையிலிருந்து முதல் பத்தாண்டுகள் ஒன்றாகவிருந்த சிலர் அதிலிருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டதற்கும் கூட்டமைப்பினரே காரணமென்பது இந்தியாவுக்கு இப்போதுதான் தெரியவந்துள்ளதா?

எதுவாயினும், இந்த வேண்டுகோளை தமிழர் தரப்பினர் அனைவரையும் ஒன்றாக அழைத்து, சந்தித்து உணவருந்தும் போது முன்வைக்க ஹர்ஸ் வர்தன் ஏன் எண்ணவில்லை? அப்படிச் செய்திருப்பின் அவரது வேண்டுகோளை நேர்மையான ஒன்றாக பார்த்திருக்க முடியும்.

இந்திய அரசியல் அதற்கு இடம் கொடுக்காது. தமிழர் தரப்பை பிரித்து வைத்து செயற்படுவதே இந்தியாவின் ராஜரீக அரசியல். 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கையொப்பமிட ராஜிவ்காந்தி கொழும்பு சென்றபோதும் இதுதான் நடந்தது. ஆயுத ஒப்படைப்பிலும்கூட இதுதான் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் கையளிக்கச் செய்து, தங்களுடன் இணைந்து இயங்கிய குழுக்களுக்கு ஆயுதங்களை இந்தியா வழங்கியது. மோடி அரசும் அவ்வழியிலேயே பயணிக்கிறது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இந்தியாவின் நிலைப்பாடு என்று தமிழர் தரப்பிடம் அழுத்திக் கூறியுள்ளார் வெளியுறவுச் செயலாளர். இதனையே கோட்டாபயவிடமும் இவர் வலியுறுத்தினாரென செய்திகள் தெரிவிக்கின்றன.

13க்கு அப்பால் - 13 பிளஸ் வருமென்று அன்று சொன்ன ஜனாதிபதியே இன்றைய பிரதமர் மகிந்த. 13 பிளஸ்க்கு என்னவானது? 13ஆவது திருத்தத்தில் இணைக்கப்பட்ட வடக்கும் கிழக்கும் உச்ச நீதிமன்ற உத்தரவால் பிரிக்கப்பட்டு 14 ஆண்டுகளாகி, தனித்தனி மாகாண சபைகளும் அமைக்கப்பட்டன. அப்போது இந்தியா எங்கே போனது?

மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் இல்லை. காவற்துறையும் கிடையாது என்று சகல சிங்கள ஆட்சியாளர்களும் கூறிவிட்டனர். இப்போது மாகாண சபைத் தேர்தல்களே நடைபெறாது என்று சில அமைச்சர்கள் பகிரங்கமாகக் கூறுகின்றனர்.

நிலைமை இவ்வாறு கவலைக்கிடமாக இருக்கையில், 13ஆவது திருத்தம் முழுமையாக அமல் செய்யப்படுமென்று எவ்வாறு இந்திய வெளியுறவுச் செயலாளர் நம்பிக்கை தரமுடியும்?

13 இல்லையென்றால் இந்தியாவுக்கு இலங்கையுடன் பேச்சு நடத்தவும், தமது சில தேவைகளை நிறைவேற்றவும், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவும் போதிய காரணமில்லாமல் போய் விடுமென்பது தமிழருக்குத் தெரியாததல்ல.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணி 15 நிமி.

கல்வி tv CHANNEL

சிறிய பேணியில் இருந்து எத்தனை தடவைகள் ஊற்றினால் பெரிய பேணியில் அரைவாசி நிரம்பும்

1. 12 தடவைகள் 2. 15 தடவைகள் 3. 20 தடவைகள்

40. தரப்பட்டுள்ள கவிதையின் நான்கு வரிகளின் ஒழுங்கு முறை யாது?

1. A - ஆசான் சொல் கேட்டு நாம்
2. B - உயர்ந்து நாமும் சிறந்திட
3. C - அன்பாய் பண்பாய் பயிலுவோம்
4. D - வளமும் அறிவும் பண்பட

1. DCAB 2. DBAC 3. BCDA

(40 x $2\frac{1}{2}$ = 100 புள்ளிகள்)

### விடைகள்

### பகுதி - I

1. 3
2. 2
3. 1
4. 3
5. 3
6. 2
7. 1
8. 3
9. 2
10. 1
11. 2
12. 1
13. 2
14. 1
15. 2
16. 1
17. 2
18. 3
19. 2
20. 2
21. 3
22. 2
23. 2
24. 2
25. 1
26. 3
27. 3
28. 3
29. 1
30. 2
31. 1
32. 2
33. 3
34. 2
35. 3
36. 1
37. 3
38. 1
39. 2
40. 2

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

பாடம் முடிந்து மணியும் அடித்தது. ஆசிரியர் வகுப்பை விட்டு வெளியேறினார். உடனே ஆதவன் ஓடி வந்து சத்தியனின் கரங்களைப் பிடித்துக் கொண்டு “சத்தியா! நீ செய்த உதவிக்கு நன்றி. நான் உனக்கு எவ்வளவோ துன்பங்கள் செய்திருப்பேன். நீ அவற்றை எல்லாம் மறந்து என்னை ஆசிரியரிடமிருந்து காப்பாற்றினாய். உன்னைப் போன்ற உயர்ந்த உள்ளம் எவருக்கும் வராது” என்று தன் கண்களில் கண்ணீர் மல்கக் கூறினான்.

1. ஆதவனுக்கும், சத்தியனுக்கும் உள்ள உறவு அல்லது தொடர்பு யாது?
   ................................................
2. உயர்திணைப் பெயர்ச் சொற்கள் இரண்டு தருக?
   ................................................
3. தன்மை ஒருமை எதிர்கால வினை முற்று ஒன்று தருக?
   ................................................
4. வினையெச்சம் ஒன்று தருக?
   ................................................
5. “நான் உனக்கு துன்பம் செய்திருப்பேன்” இவ்வாக்கியத்தை பன்மை வடிவில் எழுதுக?
   ................................................
6. விசிறியும் சுழியும் உள்ள சொல் யாது?
   ................................................
7. பந்தியில் வந்துள்ள நிறுத்தற் குறிகளை குறிப்பிடுக?
   ................................................
8. ஒத்த சொற்களை பந்தியிலிருந்து எழுதுக.
   1. நயனம் .................... 2. மனம் ....................
   3. குரு .................... 4. கை ....................
9. பிரித்து எழுதுக.
   1. செய்திருப்பேன் .................... 2. கண்ணீர் ....................
10. முன்னிலை ஒருமைப் பெயர்ச் சொல்லை பந்தியிலிருந்து எழுதுக.
    ................................................

**(10 x 1= 10 புள்ளிகள்)**

# திருகோணமலை தனியார் விடுதியில் நஞ்சருந்திய நிலையில் இரு யுவதிகள்

## அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்ப்பு; அவர்களுடன் இருந்த குழந்தை மீட்பு

திருகோணமலை, ஒக். 12

திருகோணமலை நகரில் இராஜவரோதயம் வீதியில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றின் அறையிலிருந்து நஞ்சருந்திய நிலையில் இரு யுவதிகள் மீட்கப்பட்டுள்ளனர் என்று திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த யுவதிகள் இருவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் - ஆறுமுகத்தான் குடியிருப்பை சேர்ந்த யுவதியும் (வயது 19), மாவடிச்சேனை - கரடியனாறு பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண்ணுமே (வயது 29) வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 29 வயதான பெண்ணின் இரண்டரை வயது குழந்தை சம்பவம் நடந்த இடத்திலிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இரண்டு இளம் பெண்களும் கடந்த 6ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளதையடுத்து அவர்கள் வீடு திரும்பாத நிலையில் கடந்த 8ஆம் திகதி, ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் குடும்பப் பெண்ணின் கணவனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், யுவதிகள் இருவரும் கடந்த 9ஆம் திகதி திருகோணமலை நகருக்கு வந்துள்ளதுடன், அங்குள்ள விடுதியில் தங்கியிருந்துள்ளனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அவர்கள் தங்கியிருந்த விடுதி அறையில் நீண்ட நேரமாக பாடல் ஒலித்தபடி இருந்துள்ளது.

பின்னர், குழந்தையும் நீண்ட நேரமாகத் தொடர்ந்து அழுது கொண்டிருந்ததால் சந்தேகமடைந்த விடுதி உரிமையாளர், பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சோதனையிட்டபோது யுவதிகள் இருவரும் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் மதுபானத்துடன் நஞ்சு கலந்து அருந்தினர் எனக் கூறப்படும் நிலையில் உடனடியாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்து திருகோணமலைக்கு வந்த கரடியனாறு குடும்பப் பெண்ணின் கணவனிடம் அவரின் குழந்தை கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், நஞ்சருந்திய இரு பெண்களும் மிக நெருக்கமாகப் பழகினர் எனவும், இந்த நட்பால் தமது குடும்பத்துக்குள் முரண்பாடு தோன்றியிருந்தது எனவும் குடும்பப் பெண்ணின் கணவன் தெரிவித்துள்ளார்.

மேலும், 19 வயது யுவதியும், தமது மனைவியும் இரவு நீண்ட நேரமாகக் கையடக்கத் தொலைபேசியில் குறுஞ்செய்தி பரிமாறிக்கொள்வார்கள் எனவும், இதை நிறுத்தும்படி பலமுறை கூறியும், மனைவி நிறுத்தாததால், அவரின் கையடக்கத் தொலைபேசியை ஒருமுறை உடைத்திருந்ததாகவும் கணவன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை தலைமையகப் பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# மக்களின் வயிற்றில் அடிக்கின்றது அரசு!

## பொருட்களின் விலை உயர்வுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் போர்க்கொடி



**கொழும்பு, ஒக். 12**

**“69 இலட்சம் மக்களின் வாக்குகளுடன் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, இன்று அத்தியாவசியப் பொருட்களின் விலையைப் பாரியளவில் அதிகரித்து மக்களின் வயிற்றில் அடிக்கின்றது.”**

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

பால்மா, சமையல் எரிவாயு, கோதுமை மா உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு அக்கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசு மனிதாபிமானமற்ற முறையில் செயற்படுகின்றது என்பதற்கு இதுவே சான்று என அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

எனவே, மக்களுக்கு நிவாரணங்ளை வழங்குவது தொடர்பில் அரசு முடிவொன்றை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (இ)

# மேலும் 85 பேர் கைது!

கொழும்பு, ஒக். 12

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 85 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 560 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# டிராக்டர் சில்லில் நசுங்குண்டு சாரதி பரிதாபகரமாக மரணம்



அம்பாறை, ஒக். 12

டிராக்டர் சாரதி, டிரக்டரின் சில்லில் நசுங்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம், பதியத்தலாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேரங்கட பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டிராக்டரைச் செலுத்திச் சென்ற குறித்த நபர், திடீரென ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக டிராக்டரிலிருந்து மயங்கி கீழே விழுந்து டிராக்டரின் சில்லில் நசுங்குண்டுள்ளார் என்று பதியத்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட குறித்த நபர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

பதியத்தலாவ பிரதேசத்தை சேர்ந்த 64 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ)

# அரசுக்குள் பிற்போக்குத்தனமானவர்கள் வெட்கி தலைகுனிய வேண்டிய செயல்!

## பிள்ளையான் எம்.பி. சீற்றம்

கொழும்பு, ஒக். 12

“அரசுக்குள் பிற்போக்குத்தனமானவர்கள் இருப்பது என்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய செயல். இப்படியானவர்களின் நடத்தை போலித் தேசியவாதிகளுக்குத் தீனிபோடும் செயலாகும்.”

- இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என அறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நடத்திய அநாகரிக செயல் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் கூறியதாவது:-

“அநுராதபுரம் சிறைச்சாலையில் நடந்த அநாகரிக செயலை நான் வன்மையாகக் கண்டித்திருந்தேன். அரசுக்குள் இப்படியான பிற்போக்குத்தனமானவர்கள் இருப்பது என்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய செயல். இப்படியானவர்களின் செயல் போலித் தேசியவாதிகளுக்குத் தீனிபோடும் செயலாகும்.

சிறைக் கைதிகளைப் பராமரிக்கும் பொறுப்புக்குக்குரிய இராஜாங்க அமைச்சர் இப்படி நடந்துகொண்டமை மிகக் கீழ்மட்டமான செயல்பாடு. இதை நான் வன்மையாகக் கண்டித்திருக்கின்றேன். இவ்வாறான செயல் இனிமேல் இடம்பெறக் கூடாது.

இப்படியான அநாகரிகச் செயலைச் செய்பவர்கள் இலங்கைக்குள் இருக்கின்றார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

இலங்கையில் பலவிதமான மனிதர்கள் இருக்கின்றார்கள். இப்படியான கீழ்மட்ட செயலைச் செய்பவர்களையும் வாக்குப் போட்டு பாராளுமன்றத்துக்கு மக்கள் அனுப்பி வைத்துள்ளார்கள்.

நடந்த சம்பவத்தை உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு சிறைச்சாலைப் பொறுப்புக்குரிய இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து லொஹான் ரத்வத்த விலகியிருந்தார்.

ஜனாதிபதியின் ஏற்பாட்டில் குழு அமைக்கப்பட்டு அநுராதபுரம் சம்பவம் தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றது.

இந்த விடயத்தில் அரசு பக்கச்சார்பின்றி நடக்கும் என நாம் நம்புகின்றோம். இதை நாம் கண்காணித்து வருகின்றோம்” - என்றார். (இ)

# மத்திய மாகாணத்தில் 759 பேருக்கு ‘டெங்கு’




கண்டி, ஒக். 12

மத்திய மாகாணத்தில் கடந்த 9 மாதங்களில் 759 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கண்டி மாவட்டத்தில் 562 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 157 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 40 பேரும் பதிவாகியுள்ளனர்.

கடந்த 2020ஆம் வருடத்தின் முதல் 9 மாதங்களுடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் முதல் 9 மாதங்களில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சி காணப்படுகின்றது என மத்திய மாகாண சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

2020ஆம் ஆண்டு முதல் 9 மாத காலத்தில் கண்டி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 69 டெங்கு நோயாளர்களும், மாத்தளை மாவட்டத்தில் 557 டெங்கு நோயாளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 166 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சீனாவில் பெருவெள்ளம் 18 இலட்சம் பேர் பாதிப்பு!

- பழங்கால நினைவு சின்னங்கள் ஆபத்தில்...!
- 60 நிலக்கரி சுரங்கங்கள் மூடப்பட்டன
- மின் பற்றாக்குறை மேலும் உயரலாம்

பீஜிங், ஒக். 12

சீனாவின் வடக்கு ஷாங்க்சி மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 17.6 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சீன அரசாங்கத்தின் குளோபல் ரைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் பெய்த பலத்த மழையால் இந்த மாகாணத்தில் 70க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. இந்த வெள்ளம் மண்சரிவை ஏற்படுத்தியதால் வீடுகள் பல இடிந்து வீழ்ந்தன.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழையும், கடும் காற்றும் மீட்பு பணிகளில் தொய்வை ஏற்படுத்தியுள்ளன என்று சீன இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதேநேரம், கடும் மழைவீழ்ச்சியால் ஷாங்க்சியில் காணப்படும் பல பழங்கால நினைவுச் சின்னங்கள் ஆபத்தில் உள்ளன என்று தெரிய வருகின்றது.

ஒரு இலட்சத்து 20ஆயிரம் மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டு வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 17 ஆயிரம்



வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன என்று சின்ஹூவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலச்சரிவில் சிக்கி நான்கு பொலிஸார் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், பொதுமக்களின் உயிரிழப்பு குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

சீனாவின் நிலக்கரி தேவையில் பெரும் பங்கை ஷாங்க்சி மாகாணமே பூர்த்தி செய்கிறது. கடும் மழையால் 60 நிலக்கரி சுரங்கங்கள், 372 நிலக்கரி அல்லாத சுரங்கங்கள், 14 ஆபத்தான இரசாயன தொழிற்சாலை உற்பத்திகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று மாகாண அரசு தெரிவித்துள்ளது. ஏற்கனவே மின் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள சீனாவுக்கு இது மேலும் பின்னடைவை கொடுக்கும் என்று கருதப்படுகின்றது.

ஹெனான் மாகாணத்தில் தீவிர மழை பெய்து 300இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த மூன்று மாதங்களுக்குள் மீண்டும் ஒரு துயரத்தை சீனா சந்தித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## 106 நாட்கள் பொது முடக்கம் சிட்னியில் முடிவுக்கு வந்தது!

### பொதுமக்கள் மகிழ்ச்சி கொண்டாட்டம்!

சிட்னி, ஒக். 12

அவுஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் தலைநகரான சிட்னியில் சுமார் 106 நாட்கள் தொடர்ந்த பொது முடக்கம் தளர்த்தப்பட்டுள்ளது. இதனை பொது மக்கள் "சுதந்திர தினம்" என கூறி மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் பொது முடக்கம் அதிகாரப்பூர்வமாக முடிவுக்கு வந்தது. இந்நிலையில், அத்தியாவசியமற்ற சேவைகளும் திறக்கப்பட்டதால் மக்கள் முடி வெட்டுவதற்கும், கடைகளுக்கும், உடற்பயிற்சி நிலையங்களுக்கும் சென்றனர்.

தற்போது நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் நேற்றைய நிலவரப்படி 61.9 சதவிகிதம் மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 82.2 சதவிகிதம் பேருக்கு குறைந்தபட்சம் முதல் டோஸ் போடப்பட்டுள்ளது.

இதேநேரத்தில், நேற்று காலையுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 496 தொற்றாளர்களும், 8 மரணங்களும் பதிவாகின. அயல் மாகாணமான விக்டோரியாவில் 1,612 தொற்றாளர்களும் 8 மரணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## இயற்கை அனர்த்தங்களால் சீனாவில் 792 பேர் மரணம்!

### ரூ. 887,400 கோடி பொருளாதார இழப்பு

பீஜிங், ஒக். 12

சீனாவில் கடந்த 9 மாதங்களில் மட்டும் இயற்கை அனர்த்தங்களில் சிக்கி 792 பேர் உயிரிழந்தனர் அல்லது காணாமல் போயுள்ளனர் என்று அந்த நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், உறைபனி காலநிலை, பனிப் புயல், மணல் புயல், காடு, பற்றைக்காட்டு தீ மற்றும் கடல் பேரழிவுகளால் சீனாவில் மொத்தம் 9 கோடியே 49 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தவிர, குறைந்தது 17 இலட்சத்து 50 ஆயிரம் வீடுகள் சேதமடைந்தன. அத்துடன், சுமார் 10,583 ஹெக்ரெயர் பயிர் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.
இயற்கை அனர்த்தங்கள் 4437 கோடி அமெரிக்க டொலர் - நம் நாட்டு மதிப்பில் 8 இலட்சத்து 87 ஆயிரத்து 400 கோடி ரூபாய். நேரடி பொருளாதார இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக சீன அதிகாரிகளின் தரவுகளை மேற்கோள் காட்டி குளோபல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

முதல் அரையாண்டில் குறைந்தது 156 பேர் இறந்தனர் அல்லது காணாமல் போயினர் சீன அதிகாரிகள் தெரிவித்தனர். ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில், மத்திய சீனாவின் ஹெனான் மற்றும் ஹூபே மாகாணங்களில் புயல்கள் கடுமையான வெள்ளத்தை ஏற்படுத்தின. மத்திய சீனாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக குறைந்தது 21 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாகிஸ்தான் அணுஆயுத தந்தை அப்துல் காதிர்கான் காலமானார்

இஸ்லாமாபாத், ஒக். 12

பாகிஸ்தான் நாட்டின் அணு ஆயுத தந்தை எனப் போற்றப்படும் அப்துல் காதிர் கான் உடல்நல குறைவால் நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 85.

காதிர்கான் பாகிஸ்தான் இந்தியாவுடன் இணைந்திருந்த காலத்தில் மத்திய பிரதேசத்தின் தலைநகர் போபால் நகரில் 1936ஆம் ஆண்டு பிறந்தவர். 1947ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரிவினையின்போது காதிர் கானின் குடும்பத்தவர்கள் பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தனர்.

அணு ஆராய்ச்சி வல்லுநரான அவர் பாகிஸ்தான் நாட்டுக்கு முதன்முதலாக அணு ஆயுதத்தை உருவாக்கிக் கொடுத்தார். பல்வேறு காரணங்ளுக்காக 2004 - 2009ஆம் ஆண்டுவரை வீட்டுக்காவலில் அவர் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் அதிகாலை அவர் திடீர் மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டார். உடனடியாக மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்ட போதும் காலை 7 மணியளவில் அவர் உயிரிழந்தார். (ஐ)



## கொள்கலனில் அடைக்கப்பட்ட 126 குடியேற்றவாசிகள் மீட்பு!

கௌதமாலாசிற்றி, ஒக். 12

பொருட்களை ஏற்றும் கொள்கலன் வாகனத்துக்குள் ஆட்கடத்தல்காரர்களால் ஏற்றிச் செல்லப்பட்டவேளை கைவிடப்பட்டு சிக்கித் தவித்த 126 குடியேற்றவாசிகளை கௌதமாலா பொலிஸார் மீட்டனர்.

நூவே கான்செப்சியான் மற்றும் கோக்கேல்ஸ் ஆகிய இரண்டு நகரங்களுக்கும் இடையே இருந்த ஓரிடத்தில் கடந்த சனிக்கிழமை வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த கொள்கலன் வாகனத்துக்குள் இருந்து ஆட்கள் கத்தும் சத்தம் கேட்டது. பொதுமக்கள் இது குறித்து பொலிஸாருக்கு தகவல் அளித்தனர்.

இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் கொள்கலனுக்குள் சிக்கித் தவித்த 126 பேரையும் பத்திரமாக மீட்டனர். இவர்களை மெக்சிகோ வழியாக அமெரிக்காவுக்குள் அழைத்துச் செல்லப் பணம் வாங்கிய ஆட்கடத்தல்காரர்கள் அவர்களை கொள்கலன் லொறியுடன் வீதியிலேயே விட்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாகக் கருதுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் 106 பேர் ஹெய்டியைச் சேர்ந்தவர்கள், 11 பேர் நேபாளம் மற்றும் 9 பேர் கானாவைச் சேர்ந்தவர்கள் என கௌதமாலா பொலிஸ் செய்தித் தொடர்பாளர் ஜார்ஜ் அகுவிலர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஐ)

## பொருளாதாரத்துக்கான நோபல் மூவருக்கு பகிர்ந்து அறிவிப்பு!

ஸ்டோக்ஹோம், ஒக். 12

2021 ஆம் ஆண்டுக்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு மூவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.


அமெரிக்காவை சேர்ந்த டேவிட் கார்ட், ஜோஸ்வா டி ஆங்க்ரிஸ்ட் மற்றும் கெய்டோ டபிள்யூ. இம்பென்ஸ் ஆகிய மூவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதாக சுவீடனின் ஸ்டோக்ஹோமில் தெரிவுக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் பொருளாதாரம் குறித்த பங்களிப்பிற்காக இவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

முன்னதாக, மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு நோர்வேயிலும், பிற துறைகளுக்கான நோபல் பரிசு சுவீடன் தலைநகர் ஸ்டோக்ஹோமிலும் அறிவிக்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் ஒக். 5, திங்ககிழமை முதல் தொடங்கி அறிவிக்கப்பட்டு வருகின்றன. மற்ற துறைகளுக்கு நோபல் பரிசுகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில் இறுதியாக நேற்று பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## டோனியின் இறுதிநேர அதிரடியால்

# 9ஆவது தடவையாக இறுதியில் சென்னை!



டுபாய், ஒக். 12

ஆட்டத்தை வெற்றிகரமாக முடிவுறுத்துவதில் தானே சிறந்தவர் என்பதை மீண்டும் தனது அதிரடியால் சொல்லிச் சென்றுள்ளார் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி. அவரின், இந்த சிறந்த ஆட்டத்தால் டில்லி அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது சென்னை அணி. இந்த வெற்றியின் மூலம் 9ஆவது முறையாக சென்னை அணி ஐ. பி. எல். தொடரின் இறுதியாட்டத்துக்கு முன்னேறியது சென்னை.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கும் ஐ. பி. எல். இருபது - 20 தொடரில், நேற்று முன்தினம் இறுதியாட்டத்துக்கு முந்தைய சுற்றின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னையின் தலைவர் டோனி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்னை அணி 19.4 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு வெற்றி இலக்கான 173 ஓட்டங்களைப் பெற்றது.

சென்னை அணியின் கெய்க்வாட் - ரொபின் உத்தப்பா இணை, அதிரடியாக ஆடி 110 ஓட்டங்களை இரண்டாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டமாக பெற்றது. உத்தப்பா 35 பந்துகளில் அரைச்சதம் அடிக்க, கெய்க்வாட் 37 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். உத்தப்பா 44 பந்துகளில் 63 ஓட்டங்களையும், கெய்க்வாட் 50 பந்துகளில் 70 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்த அடித்தளத்தை பின்னர் வந்த வீரர்கள் பயன்படுத்தவில்லை. தாகூர் 0, ராயுடு 1 என ஆட்டமிழந்து தடுமாற, மொயின் அலியுடன் இணைந்தார் மகேந்திரசிங் டோனி. ஜடேஜாவுக்கு முன்னர் இவர் களமிறங்கியதை ரசிகர்கள் விரும்பவில்லை. காரணம் அவரின் அண்மைக்கால துடுப்பாட்டமே. ஆனால், தன்மீதான விமர்சனங்களை எல்லாம் தவிடுபொடியாக்கும் விதமாக டோனி துடுப்பெடுத்தாடினார்.

ஆவேஷ் கான் ஓவரில் தான் சந்தித்த முதல் பந்தில் ஓட்டம் எடுக்காமல் அடுத்த பந்தை சிக்ஸர் தூக்கியபோதே தோனியை விமர்சித்தவர்கள் வாய் அடைத்துப் போயினர். கடைசி ஓவரில் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவை. ரொம் பரன் பந்துவீசினார். களத்தில் மொயின் அலி, டோனி இருந்தனர்.

முதல் பந்தை சந்தித்த மொயின் அலி 16 ஓட்டங்களில் ரபாடாவிடம் பிடி கொடுத்து வெளியேறினார். 2ஆவது பந்தை டோனி சந்தித்தார். அந்தப் பந்தை எக்ஸ்ட்ரா கவரில் அருமையான பௌண்ட்ரி ஆக்கினார். 3ஆவது பந்துடம் டோனியின் துடுப்பில் பட்டு பௌண்ட்ரிஆனது. ஆட்டம் பரபரப்பின் உச்சத்துக்கு சென்றது.

4ஆவது பந்தில் டோனி பந்தை அடிக்க முயற்சிக்க அகலப்பந்தாக வீசப்படவே ஓர் ஓட்டம் கிடைத்தது. 4ஆவது பந்து மீண்டும் வீசப்பட்டபோது, தனக்கே உரிய ஸ்ரைலில் பௌண்ட்ரி அடித்து ஆட்டத்தை முடித்தார் டோனி.

இறுதியாக, டோனி 6 பந்துகளில் ஒரு சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளுடன் 18 ஓட்டஙகளை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

டில்லி கப்பிட்டல்ஸ் தரப்பில் ரொம் கரண் 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு, பிரித்வி ஷா, தவான் ஓரளவுக்கு நல்ல தொடக்கம் அளித்தனர். தவான் நிதானமாக ஆட, பிரித்வி ஷா வெளுத்து வாங்கினார். தவான் 7 ஓட்டங்களிலும், ஸ்ரேயாஸ் ஓர் ஓட்டத்துடனும் ஹசல்வூட்டின் பந்தில் ஆட்டமிழந்தனர். பவர்ப்ளேயில் 2 விக்கெட் இழப்புக்கு 51 ஓட்டங்களை சேர்த்தது டில்லி .

அதிரடியாக ஆடிய பிரித்வி ஷா 27 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். 4ஆவது வீரராகக் களமிறங்கிய அக்ஸர் பட்டேல் 10 ஓட்டங்களில் மொயின் அலி பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ஜடேஜாவின் பந்துவீச்சில் பிரித்வி ஷா 60 ஓட்டங்களில் (34 பந்துகளில் 3 சிக்ஸர், 7 பௌண்ட்ரி) ஆட்டமிழந்தார். 50 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைஇழந்த டில்லி, அடுத்த 30 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்களை இழந்தது.

5-வது விக்கெட்டுக்காக ஹெட்மேயர், ரிஷப் பந்த் இணை சேர்ந்தனர். இருவரும் 83 ஓட்டங்களை இணைப்பாட்ட மாகப் பெற்று அணியை நல்ல நிலைக்குக் கொண்டு சென்றனர். ஹெட்மேயர் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ரிஷப் பந்த் 35 பந்துகளில் 51 ஓட்டங்கள் சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

50 பந்துகளில் 70 ஓட்டங்கள் (2சிக்ஸர்கள் 5 பௌண்ட்ரிகள்) அடித்து ஆட்டமிழந்த கெய்க்வாட்டுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. (ஐ)




## ஆஷஷ் டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு!

லண்டன், ஒக். 12

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து மோதும் ஆஷஷ் டெஸ்ட் தொடர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் தொடங்குகிறது. இதற்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி தொடங்கி ஜனவரி 18ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணியின் விவரம் வருமாறு,

ஜோ ரூட் (அணித்தலைவர்), ஜேம்ஸ் அண்டர்சன், பெயர்ஸ்ரோ, ரொம் பெஸ், ஸ்ருவர்ட் பிரொட், ரோரி பேர்ன்ஸ், ஜோஸ் பட்லர், , ஜாக் கிராவ்லி, ஹசீப் ஹமீது, டெரன் லோரன்ஸ், டேவிட் மலன், கிரேக் ஓவர்டன், ஜாக் லீச், ஆலி போப், ஆலி ரொபின்சன், கிறிஸ் வோக்ஸ்,, மார்க்வூட். (ஐ)




## ரி - 20 உலக கிண்ணம்; பரிசு தொகை அறிவிப்பு


டுபாய், ஒக். 12

ஐக்கியஅரபு இராச்சியத்தில் இந்தமாதம் தொடங்கவுள்ள இருபது - 20 உலகக்கிண்ணப் போட்டியில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கும், இரண்டாவது இடம் பெறும் அணிக்குமான பரிசுத் தொகையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) வெளியிட்டுள்ளது.

இதன்படி, சம்பியன் வெல்லும் அணிக்கு 16 இலட்சம் டொலர்களும் - 32 கோடி இலங்கை ரூபாய் பரிசாகவும், இரண்டாவது இடம்பெறும் அணிக்கு 8 இலட்சம் டொலர்கள் - 16 கோடி இலங்கை ரூபாய் பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர, அரையிறுதியில் தோல்வியடையும் இரு அணிகளுக்கும் 4 இலட்சம் டொலர்கள் - 8 கோடி இலங்கை ரூபாய், அரையிறுதிக்கு முன்னேறாத 8 அணிகளுக்கு 70 ஆயிரம் டொலர்கள் - ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாயும் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியின் மொத்த பரிசு தொகையாக 56 இலட்சம் டொலர்கள் - 380 கோடி இலங்கை ரூபாய் வழங்கப்படவுள்ளது.

உலகக் கிண்ண இருபது - 20 போட்டிகள் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 14ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (ஐ)



## அரசன் திரும்ப வந்துவிட்டார் டோனி குறித்து கோலி பதிவு!

புதுடில்லி, ஒக். 12

டோனியின் துடுப்பாட்டத்திற்கு புகழாரம் சூட்டி தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார் விராட் கோலி.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த இறுதியாட்டத்துக்கு முந்தைய சுற்றுப் போட்டியின் முதல் போட்டியில், இறுதி ஓவரில் டோனி அதிரடியான தனது ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

டோனியின் இந்த ஆட்டம் பற்றி கோலி பதிவிடுகையில், “அரசன் திரும்ப வந்துவிட்டார். ஆட்டத்தின் மிகச்சிறந்த ‘ பினிஷர்’ நேற்று மீண்டும் ஒருமுறை நான் என்னுடைய இருக்கையில் இருந்து துள்ளிக்குதித்தேன் டோனி”, இவ்வாறு விராட் கோலி தெரிவித்துள்ளார். (ஐ)

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 12

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நளை புதன்கிழமை மு.ப. 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

அந்த சங்கத்தின் மத்திய மற் றும் ஊடகக்குழு உறுப்பின ரான மருத்துவர் வாசன் ரட்ண சிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர்களுக் கான இடமாற்றங்கள் உரிய முறையில் இடம்பெறாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன் னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# இலங்கை வரும் விமான பயணிகளின் எண்ணிக்கை கட்டுப்பாட்டில் தளர்வு

கொழும்பு, ஒக். 12

இலங்கைக்கு வரும் விமா னத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு நீக் கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 7 ஆம் திகதி முதல் இந்த உத்தரவு அமுலுக்கு வந்த தாக சிவில் விமான போக்கு வரத்து அதிகாரசபை தெரிவித் துள்ளது.

கொரோனா பரவலை அடுத்து, ஒரு விமானத்தில் அதிக பட்சமாக 75 பயணிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என கட்டுப்பாடு விதிக்கப்பட் டது. தற்போது அந்த கட்டுப் பாடு நீக்கப்பட்டுள்ளது.

எனினும், முழுமையான தடுப்பூசி செலுத்தப்பட்டவர் கள் மட்டும் பி.சி.ஆர் சோதனை யின் பின் நாட்டுக்குள் அனு மதிக்கப்படுவார்கள். தடுப்பூசி பெறாத பயணிகள் 14 நாள்க ளுக்கு கட்டாய தனிமைப் படுத் தலுக்கு உட்படுத்தப்படவேண் டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிறப்பு விமானத்தில் கென்யா பயணமா?

## அமைச்சர் நாமல் விளக்கம்

கொழும்பு, ஒக். 12

கென்யாவுக்கு சிறப்பு விமா னத்தில் பயணித்ததாகக் கூறப் படும் சர்ச்சைக்குரிய தகவலை இளைஞர் மற்றும் விளையாட் டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

அந்தவகையில், கென்யா தலைநகருக்கு திட்டமிட்ட விமானத்தில் பயணம் செய்த தாகவும், சிறப்பு விமானத்தில் பயணம் மேற்கொள்ளவில்லை என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வின் கென்யாவுக்கான உத்தி யோகபூர்வ விஜயத்துக்கு ஸ்ரீலங் கன் எயார்லைன்ஸ் விமான மொன்றை முழுமையாக முன் பதிவு செய்ததாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் குறித்த விவ காரத்தை அவர் மறுத்து, தனது பயணம் தொடர்பாக விளக்க மளித்துள்ளார்.

அத்துடன் கென்யாவுக்கான விஜயத்தின்போது அவர் விளை யாட்டு, சுற்றுலா மற்றும் இளை ஞர் விவகார அமைச்சர்களுடன் பேச்சு நடத்தினாரென தெரி விக்கப்பட்டுள்ளது.

# இந்தியத் துணை தூதுவருடன் கூட்டமைப்பினர் நேற்று சந்திப்பு



யாழ்ப்பாணம், ஒக் . 12

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ் கரனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று மாலை 3 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தனும் இந்தச் சந்திப்பில் கலந்து கொ ண்டார். (இ)

# தமிழ் இளைஞரைத் துப்பாக்கிகளை ஏந்தவைத்தவர்கள் பேரினவாதிகளே

## இராஜாங்க அமைச்சரின் கருத்துக்கு கூட்டமைப்பு பதில்

யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழ் இளைஞர்களைச் சய னைட் குப்பிகளையும், துப்பாக் கிகளையும் ஏந்த வைத்தவர்கள் பௌத்த சிங்கள பேரினவாதி களே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின் கருத்துக்குப் பதில ளிக்கும்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தவை வருமாறு:-

“கடந்த வாரம் நடைபெற்ற நயினாதீவு நீர்வழங்கல் திட்டத் துக்கான கடல்நீரை நன்னீராக் கும் சுத்திகரிப்பு நிலையத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய, கிராமிய மற்றும் பிரதேச நீர்வழங்கல் கருத்திட் டங்கள் அபிவிருத்தி இரா ஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, ‘சயனைட் குப்பிகளையும், புத் தகங்களையும் ஏந்திய வடக்கு மாகாண இளைஞர்களை இன்று புத்தகங்களையும், பேனாவை யும் ஏந்த வைத்திருப்பதாகவும், இந்த நல்லெண்ணத்திற்கு வித் திட்டவர்கள் இன்றைய ஜனா திபதியும், பிரதமருமே’ என்றும் குறிப்பிட்டிருந்த கருத்து உண் மைக்குப் புறம்பான புனை வாகும். அது அமைச்சரின் சிங் கள - பௌத்த பேரினவாத சிந்த னையையே எடுத்துக்காட் டுகிறது.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் குறித்தோ, அதன் வரலாறு பற்றியோ, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றுவாய் குறித்தோ இரா ஜாங்க அமைச்சர் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், இத்தகைய கருத்துக்களை வெளியிட முன்னராவது வர லாற்றை அறிவதற்கு அவர் முயற்சித்திருக்க வேண்டும். இந்த நாட்டில் எழுபது ஆண் டுகளுக்கு மேலாகப் புரையோ டிப் போயிருக்கும் இனப் பிரச் னைக்கு அடித்தளமிட்டது யார் என்பதையும், தமது சொந்த நாட்டில் இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து, அமைதி வழியில் போராடிப் பெறமுடி யாதுபோன அடிப்படை உரி மைகளைப் பெற்றுக்கொள்வ தற்காகவே தமிழர்கள் ஆயுத மேந்த நிர்ப்பந்திக்கப்பட்டார் கள் என்பதை இனியாவது இரா ஜாங்க அமைச்சர் கற்றுக்கொள் வது அவரின் அரசியல் எதிர் காலத்துக்கு தேவையானதாக அமையும்.

சுதந்திர இலங்கையில் என்ன நிகழ்ந்தது என்பதை அப்போது பிறந்தேயிராத அமைச்சர் அறிந் திருக்க மாட்டார். அதன் விளை வாகத்தான் அவர் வெளியிட் டுள்ள கருத்தும் அத்தனை அபத்தமாக அமைந்துள்ளது. 1957 இலும், 1965 இலும் இலங்கையில் இனச் சமத்து வத்தை அங்கீகரிக்க அடிப் படையாக அமைந்த பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், டட்லி - செல்வா ஒப்பந்தத்தை யும் சிங்கள அதிகார பீடங்கள் தான் கிழித்தெறிந்தன.

பன்மைத்துவமற்ற அரசியல மைப்பை உங்கள் இனத்தவர் கள் தான் உருவாக்கினார்கள், பௌத்தத்தை மட்டும் முதன்மை பெற வைத்து, தரப்படுத்தலை சிங்களத் தலைவர்களே மேற் கொண்டார்கள், தமிழ்மொழி யைப் புறக்கணித்து, தமிழர் தாயகத்தில் நிலவிய மரபுரிமை சார்ந்த கூட்டு வாழ்வைச் சிதைத்து, சிங்களக் குடியேற்றங் களை உருவாக்கினார்கள், இன வாதிகளை உருவாக்கி எம்மின மக்களை வெட்டிச் சரித்தும், சொத்துக்களை அழித்தும், தீயிட் டுக் கொழுத்தியும், தமிழ்ப் பெண்களின் மார்புகளில் சிங் கள ‘ஸ்ரீ’ ஐ கொதிக்கும் தாரால் குறிவைத்தும், பச்சிளம் குழந்தை களை கொதித்த தார்ச்சட்டிக ளுள் வீசி எறிந்தும், தமிழ் இளை ஞர்களின் கண்களை உயிரோடு தோண்டி எடுத்தும் ஓரினத்தின் இருப்பை அடியோடு ஆட்டம் காண வைத்து, அவர்களின் உணர்வுகளை கொதிநிலைக்கு இட்டுச்சென்றது யாரென்பதை இந்த உலகம் அறியும்.

தமிழர்கள் ஓர் அறிவார்ந்த சமூகம் என்பதை எண்பித்த வர லாற்றுச் சாட்சியமாய், தமிழர் களின் தனிப்பெரும் கல்வி அடையாளமாய் இருந்த தெற் காசியாவின் அறிவுக் களஞ்சிய மான யாழ்ப்பாணம் பொதுநூ லகத்தை 1981 ஜூன் 30ம் திகதி நள்ளிரவு தீயிட்டுக் கொழுத்தி எமது இனத்தின் அறிவாண்மை யைச் சிதைக்கும் செயலில் சிங் கள இனவெறியர்கள் ஈடுபட்டதை, அப்போது ஆறு வயதுச் சிறுவனாக இருந்த நீங் கள் அறிந்திருக்க வாய்ப்பில்லைத் தான். இந்த அவலம் மிகுந்த வர லாற்றால் வெஞ்சினம் கொண்ட இளைஞர்கள் தான், வெகுண் டெழுந்து எமக்கான வரலாற் றைப் படைத்தார்கள். அடக்கப் படுகிறபோது விடுதலை பெற வேண்டுமென்ற உணர்வு மனித சமூகத்தின் தன்னியல்பான குணாம்சம். அதனையே எங்கள் இளைஞர்களும் செய்தார்கள். அவர்கள் ஒருபோதும் வன் முறையை விரும்பியவர்களல்ல. ஆயுதங்களை அவர்கள் விரும்பி ஏற்றவர்களும் அல்ல. தங்களை யும், தங்கள் இனத்தையும் தற் காத்துக் கொள்வதற்காக போராடி அதற்காகவே தங்கள் உயிர்களை ஈர்ந்தார்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனே ‘ஆயு தங்களை நாம் ஒருபோதும் விரும்பி ஏற்கவில்லை. அவை எம்மீது வலிந்து திணிக்கப் பட்டவையே’ என்று 1985 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து வெளிவந்த சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.

இவற்றைவிட, சிங்கள இன வாத அரசு காலம்காலமாக மேற்கொண்டுவந்த தமிழினப் படுகொலைகளும், தமிழர்க ளின் வாழ்வியல் போக்கைத் திசைமாற்றியதில் பெரும் பங்கு வகித்தன. வடக்கு இளைஞர்க ளைத் தாம் புத்தகமும், பேனா வும் தூக்க வைத்திருப்பதாகப் பெருமிதம் கொள்ளும் இரா ஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, இனவாத அரசால் வயதுவேறு பாடற்று மேற்கொள்ளப்பட்ட சிறுவர் படுகொலைகள் குறித் தும் அறிய முற்பட வேண்டும். நவாலிப் படுகொலை, நாகர் கோவில் பாடசாலைப் படு கொலை, கொக்கட்டிச்சோலைப் படுகொலை, வாகரைப் படு கொலை, செஞ்சோலைப் படு கொலை, முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புப் படுகொலை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்க ளில் கொல்லப்பட்ட ஆயிரக் கணக்கான அப்பாவிச் சிறுவர் களின் உயிரிழப்புக்களுக்கும், இறுதிப் போரின்போது இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி யில் வைத்து காணாமலாக்கப் பட்ட பல நூற்றுக் கணக்கான சிறுவர்களுக்கும் நீதியைப் பெற் றுக்கொடுக்கத் திராணியற்ற பேரினவாத நாட்டில், தமிழ் மாணவர்களின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் அக்க றையும், பெருமிதமும் அடைவது நகைப்புக்கிடமான செயலாகும்.

வரலாறு இவ்வாறிருக்க, நல் லெண்ணத்திற்கு வித்திட்டதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பி டும் இன்றைய ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது எம் இனம் மீது பிரயோகித்துவரும் அடிப் படை வன்முறைகள் கூடவா அமைச்சரின் கண்களுக்கு இன்னும் புலப்படவில்லை?. நாம் கண்ணீர் விட்டு அழவும் தடையுத்தரவு தருகின்றீர்கள். ஒவ்வொரு அப்பாவித் தாய், தந்தையின் நெஞ்சிலும் ஆணி யால் அடிக்கிறீர்கள், தங்கள் தாய், தந்தையரின் கல்லறைகள் இல்லாது போன காலத்திலும், அவர்கள் புதையுண்ட நிலங் களை முத்தமிடத் துடிக்கின்ற பிள்ளைகளின் தலையிலே சம் மட்டியால் அடிக்கின்றீர்கள். அவர்களை நினைந்து அழுவ தையும், தொழுவதையும் பயங் கரவாதம் என பறைசாற்றுகி றீர்கள். இலங்கை தேசத்தில் வாழ்கின்ற சிங்கள தேசிய இனம் போலவே நாமும் ஒரு தேசிய இனமாக, எமக்கென்றோர் தனித்துவமான பண்பாட்டு, விழுமியங்களோடு இந்த வர லாற்றுத் துயர்களை எல்லாம் மறந்து வாழ முற்படும் வேளை யில் சர்வதேச மனித உரிமை சாசனங்களை மீறி, இலங்கை யின் உள்நாட்டு அடிப்படை உரிமைகளுக்கு முரணாக, சர்வ தேச சமவாயங்களின் அடிப்ப டைக் கோட்பாடுகளைக் கூட அங்கீகரிக்கத் தவறி, எமது சமூக, பண்பாட்டு, விழுமியங்களை நிராகரித்து ‘பௌத்த புராண, இதிகாசமான மகாவம்ச சிந்தனை களிலிருந்து சிங்களதேசம் மீண்டு வந்து தமிழ் மக்களுக்கு சமத்துவமான தீர்வொன்றைத் தருமென்று நான் துளியேனும் நம்பவில்லை’ என்ற தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரனின் சிந்தனையை மெய்ப்பிப்பதாகவே உங்கள் செயல்பாடுகள் இன்றும் அமைந் துள்ளன.

கைதுகள், காணாமலாக்கல் கள், நில ஆக்கிரமிப்பு, மரபுரி மைச் சின்னங்களை அழித்தல், திட்டமிட்ட சிங்களக் குடியேற் றங்கள் என தமிழ்த்தேசிய இனம் மீதான உங்களின் அடிப்படை இனவன்முறைகள் இன்னும் இன்னும் அதிகரித்துச் செல்லும் அதிபயங்கரமான சூழலில் எமது போராட்டம் குறித்து கருத்து ரைப்பதற்கு அருகதையற்ற இரா ஜாங்க அமைச்சர், சயனைட் குப்பியும், துப்பாக்கியும் ஏந்திய எங்கள் பிள்ளைகளை தாமே புத்தகங்களை ஏந்த வைத்திருப் பதாக தெரிவித்துள்ள கருத்தை அவரின் அரசியல் அறியாமை யின் வெளிப்பாடாகவே நான் பார்க்கிறேன்” - என்றார்.

(இ)

## தமிழ் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

சம்பந்தனின் தலைமைப் பதவியை அவருக்குப் பிறகு பெற்றுக்கொள்ள சுமந்திரன் தகுதியானவரா என்று பேட்டியாளர் கேட்டபோது, தகுதியானவரா என்று கேட்டால் ஆம் என்பேன் என்று அவர் பதிலளித்திருக்கிறார்.

அவரின் பேட்டியின் சில பகுதிகளை கேள்வி பதில் வடிவில் இங்கே தருகின்றோம்.

கேள்வி: தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கும், மக்களின் நம்பிக்கையை வெல்வதற்கும் சுமந்திரன், சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பினர் உயர் மட்டத்துக்கு செல்வதற்கான நோக்கம் என்ன?

பதில்: அதற்கு பிரதான காரணம் நாம் முன்னர் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளித்தோம். ஆனால், எந்தப் பயனும் இல்லை. அதன் காரணமாக மக்கள் அங்கும் இங்கும் அலை மோதினர்.

கேள்வி: அப்படி என்றால் நல்லாட்சி அரசாங்கத்தில் சிதைவு ஏற்பட்டது?

பதில்: அந்த சிதைவின் தாக்கம் எம்மையும் தாக்கியது.

கேள்வி : அதற்கு பொறுப்புக்கூற வேண்டியது சுமந்திரன் அல்லவா?

பதில்: சுமந்திரன் அதற்குப் பொறுப்புக்கூறவேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

கேள்வி: சுமந்திரன் பிரச்னைகளை விற்றுப் பிழைக்கின்றாரா?

பதில்: அவ்வாறு கூறமுடியாது. நாம் அப்படி செயற்படுவதும் இல்லை.

கேள்வி: சுமந்திரன் தனிப்பட்ட விளையாட்டொன்றை விளையாடுகின்றாரா? அதாவது தான் ஒரு தேசிய அரசியல்வாதி என்ற வகையிலான தனிப்பட்ட விளையாட்டொன்றை விளையாடுகின்றாரா?

பதில்: அதனை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

கேள்வி: சம்பந்தனின் தலைமைப் பதவியை அவருக்குப் பின்னர் பெற்றுக் கொள்ள சுமந்திரன் தகுதியுடையவரா?

பதில்: தகுதியானவரா எனக் கேட்டால் ஆம் தகுதியானவர்.

கேள்வி: எதற்காக இந்தியாவின் வெளிவிவகார செயாலாளர் இலங்கை வந்தார்?

பதில்: அவர் புதிதாக நியமிக்கப்பட்டவர். ஆகவே அயல் நாடுகளுக்கு விஜயம் செய்வது சாதாரணமான விடயமாகும்.

கேள்வி: அப்படியாயின் கதவை டைத்துக்கொண்டு நீங்கள் பேசியது என்ன?

பதில்: நாம் கதவை அடைத்துக் கொண்டு பேசவில்லை.

கேள்வி: அப்படியானால் பேசிய விடயங்களை கூறினீர்களா?

பதில்: ஆம் பேச்சு முடிந்தவுடன் நாம் பேசிய விடயங்களை வெளியில் வந்து தெரிவித்தோம்.

கேள்வி: கூட்டமைப்பின் தேர்தல் வாக்குளை வேறொரு இடத்தில் கொண்டு சென்று வைப்பதற்கான நிலை தென்படுகின்றதா?

பதில்: இல்லை அவ்வாறானதொரு நிலை இல்லை.

கேள்வி: தேசிய தலைவரொருவர் இல்லை?

பதில்: ஆம் இல்லை.

கேள்வி: எதிர்க்கட்சியென்ற ஒன்று இல்லை?

பதில்: ஆம். இல்லை

கேள்வி: உங்களுக்கு தென்படவில்லையா?

பதில்: இப்பொழுது எமக்கு தென்படவில்லை. ஆகவே நாம் அதனை உருவாக்க வேண்டும். (அ)

## ராஜபக்ஷ

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வலியுறுத்தினார்.

"எதிர்க்கட்சியின் மூச்சு" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மருத்துவமனை உபகரணங்களை தந்திரிமலை பிரதேச மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டைக் கட்டியெழுப்புவது மாத்திரமன்றி, நாட்டின் பொருளாதாரத்தைக்கூட முகாமைத்துவம் செய்துகொள்ள முடியாததை இந்த அரசு நிரூபித்துக் காட்டியுள்ளது.

நாட்டைக் கொண்டு செல்லும் திறன் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு இந்த அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய குழுவிடம் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விருப்பத்துக்கு ஏற்ப அதிகரித்துச் செல்லும்போது, அதனைக் கட்டுப்படுத்த முடியாது எனச் சொல்லுவதாயின், அரசு எதற்கு எனக் கேட்கின்றேன்.

இந்த நேரத்தில் மக்கள் எதிர்கொள்ளும் கடுமையான பிரச்சனைகளில் இருந்து மக்களை மீட்டு, அவர்களின் அன்றாட வாழ்க்கையை சுமுகமாகப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான திறன் அரசிடம் இல்லையென்றால், அதை ஏற்றுக்கொண்டு உடனடியாகப் பதவி விலக வேண்டும்" - என்றார். (இ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முற்பகல் இந்த பதவி யேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்த அவர் கடந்த வாரம் அந்த பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

மனிதாபிமான அமைப்புக்களின் கூட்டமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளராகவும் ஜீவன் தியாகராஜா கடமையாற்றியுள்ளார்.

இதற்கு முன்னர் வட மாகாண ஆளுநராக திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரை யாடப்படவில்லை. தீர்மானமும் எட்டப்படவில்லை."

-இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் மனோ கணேசனே அறிவிப்பு விடுத்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வலிந்து திணிக்கப்பட்டவையே என்று 1985ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து வெளிவந்த சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காண லில் குறிப்பிட்டிருந்தார்", என்றும் அவர் கூறினார்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் கருத்து ஒன்றுக்குப் பதிலளிக்கும் விதமாக அவர் நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சிறீதரன் எம். பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)

(விரிவான செய்தி பக்கம் 14இல்)

# மஹிந்தானந்தவின் கொடும்பாவி எரிப்பு விவசாயிகளின் ஆர்ப்பாட்டம் உக்கிரம்!



கொழும்பு, ஒக். 12

உரத் தட்டுப்பாட்டால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, உரத்தை விரைவில் பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தியும் ஹிங்குராங்கொட விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். உரத்தை இல்லாது செய்து, விவசா யத்தை அழித்த, விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பதவி விலக வேண்டும் என வும் விவசாயிகள் வலியுறுத்தினர்.

அத்துடன், விவசாயத்துறை அமைச்சரின் கொடும்பாவியை எரித்து கடும் எதிர்ப்பையும் வெளியிட்டனர். (அ)

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் கடந்த 7ஆம் திகதியும் நீக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து நாட்டில் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து வருகின்றன.

இந்த நிலையில், கோதுமை மாவின் விலை ஒரு கிலோ 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலையின்படி கோதுமை மாவின் விலை 97 ரூபாயாகும். நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலை அதிகரிக்கப்பட்டுள்ளதா பிறீமா, செரண்டிப் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

பால்மாவின் விலையும் கிலோவுக்கு 250 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோ பால்மா பைக்கற்றின் விலை 1,195 ரூபாயாகவும், 400 கிராம் பைக்கற்றின் விலை 480 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூலப் பொருட்களின் விலையுயர்வை காரணம் காட்டி பாண், சிற்றுண்டி பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி, பாணின் விலை 5 ரூபாயால் உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோன்று சமைத்த உணவுப் பொருட்களின் விலையை 10 ரூபாயால் சிற்றுண்டி சாலை உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர். இதன்படி, மதிய சாப்பாட்டு பொதி, கொத்துரொட்டி, மற்றும் சிற்றுண்டிகள் 10 ரூபாயால் அதிகரித்துள்ளன. அத்துடன், தேநீர் 25 ரூபாயாகவும், பால் தேநீர் 60 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தவிர, சிமெந்தின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 50 கிலோ சீமெந்து பைக்கற் ஒன்றின் விலை 93 ரூபாயால் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் லிற்றோ எரிவாயுவின் விலையிலும் அதிகரிப்பு செய்யப்பட்டது. இந்த நிலையில் அந்த நிறுவனம் விலையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

12.5 கிலோ எரிவாயுவின் 2750 ரூபாயாக உயர்த்தப்பட்ட நிலையில், 75 ரூபாய் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 2,675 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று 5 கிலோ எரிவாயு 30 ரூபாய் குறைந்து 1,071 ரூபாயாகவும், 2.5 கிலோ எரிவாயு 14 ரூபாயால் குறைவடைந்து 506 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் நாட்டு மக்கள் கடும் அதிருப்தியையும் எதிர்ப்புகளையும் சமூகவலைத்தளங்களில் பதிவு செய்து வருகின்றனர். (ஐ)

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உருவாகும் அபா யம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டுத்தலங்களில் பொது மக்கள் மீண் டும் ஒன்றுகூடும் பட்சத்தில் கொவிட்-19 கொத் தணி உருவாகக் கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக சுகாதார தரப்பினர் எச்சரித்துள்ளனர்.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

வழிபாடுகளில் ஈடுபடும்போது உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## வடமராட்சியில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்லப்பட் டுள்ளன.

இந்தச் சம்பவம் வடமராட்சி, கற்கோவளம் - புனித நகர் பகுதியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி புனிதநகர் பகுதியில் கஞ்சா, கசிப்பு, போதை வஸ்து உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கையில் நபர் ஒருவர் ஈடுபட்டு வருகின்றார் எனவும், இது தொடர்பில் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் நேற்றுமுன்தினம் காலை சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டவரைத் தட்டிக் கேட்டனர் எனவும் தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்து மதியம் 2 மணியளவில் மேற்படி கிராமத்துக்குள் வாள்களுடன் புகுந்த சுமார் 50 வரையான கும்பல் சட்டவிரோதச் செயற்பாட்டைத் தட்டிக் கேட்டவர்களின் வீடுகள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதில் மூவர் வாள் வெட்டுக்கு இலக்காகினர். 8 வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. அத்துடன் 3 மோட்டார் சைக்கிள்களும் சேதமாக்கப்பட்டுள் ளன. இரண்டு மோட்டார் சைக்கிள்களும், தூம் வழிமூலம் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் தொலைபேசிகளும் கொள்ளையிடப்டுச் செல்லப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸார் அப்பகுதிக்கு இரவு சென்றனர் எனவும், பொலிஸாரை வாள் கொண்டு அவர்கள் மிரட்ட முற்பட்டதான் காரணமாக பொலிஸார் இராணுவத்தின் உதவியைக் கோரியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்ததை அடுத்து அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித் துறை பொலிஸார் மூவரைக் கைது செய்துள்ளனர். (இ - 02)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

மலர்வு 22 - 03 - 1969



உதிர்வு 07 - 10 - 2021

### இராசரட்ணம் ஆனந்தகுமார் (விஜயன்)

யாழ். வேலணை கிழக்கு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Argenteuilஐ வதிவிடமாகவும் கொண்ட இராசரட்ணம் ஆனந்தகுமார் கடந்த 07-10-2021 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இராசரட்ணம், கண்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி குலேந்திரவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், வனிதராஜி(வனிதா) அவர்களின் பாசமிகு கணவரும், அஜந்தன், அகிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரி(விஜி), நாகேஸ்வரி(ஜெசி), பாலேஸ்வரி(வாணி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கணேஸ்வரன்(ஈசன்), கேசவன், மோகன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்ற குகன், லவன், கமலன், லோகன், சுகி ஆகியோரின் அத்தானும், யோகா, கஜி, பிரபா, திவ்யா, ரவி ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், லக்ஷா, கௌசிகன், கல்யாணி, டிலக்ஷா, அக்ஷயா, துளசி, தர்சி, இலக்ஷன், கௌசிகா, சங்கீதா, அபிஷா, நிதுஷா, ஆதிஸ், திவிஸ்கன், துவிஸ்கன், அனுஜன், அபிஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஸ்வின், துர்க்கா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

பார்வைக்கு :
Tuesday, 12 Oct 2021 3:00 PM - 4:00 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

கிரியை :
Thursday, 14 Oct 2021 8:00 AM - 11:00 AM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

தகனம்:
Thursday, 14 Oct 2021 11:00 AM - 12:00 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ரவி - தம்பி
Mobile : +16478028981

தகவல்:
குடும்பத்தினர்

# உங்களிடம் நாம் கொடுத்துள்ள ஆயுதத்தை செயல்படுத்துங்கள்

## மீன்பிடி அமைச்சரிடம் சுமந்திரன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஒக்.12

**"ஆயுதத்தை மீன்பிடி அமைச்சிடம் நாம் கொடுத்திருக்கின்றோம். அதை வைத்துக் கொண்டு செயல்படுத்தாமல் விடுவது எங்களுடைய மீனவர்களுக்கே பாதிப்புக்களை ஏற்படுத்தும்."**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனை நேற்று சந்தித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

எமது கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் வந்து எங்களுடைய மீனவர்களுடைய மீன்பிடி உபகரணங்களை பாதிக்கச் செய்த பல விடயங்கள் அண்மைக்காலமாக நடந்திருக்கின்றன.

அவர்களுடைய இலட்சக்கணக்கான மீன்பிடி உபகரணங்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. இந்த விடயங்கள் சம்பந்தமாகவே இந்தியத் துணைத் தூதுவருடன் கலந்துரையாடினோம்.

2018ஆம் ஆண்டு இழுவை மடித் தொழிலைத் தடுக்க வேண்டும் என ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அது சட்டமாக்கப்பட்டாலும் மீன்பிடி அமைச்சு அந்தச் சட்டத்தை அமுல்படுத்தாமல் இருப்பதுதான் இதற்குப் பிரதான காரணமாக இருக்கின்றது. அந்தச் சட்டத்தை அமுல்படுத்தினால் இந்தப் பிரச்னை பெரியளவிலே தீர்ந்துவிடும்.

அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது இந்திய வெளிவிவகார அமைச்சு ஓர் எச்சரிக்கை ஒன்றை தமிழக மீனவர்களுக்கு விடுத்திருந்தது. ஒரு கடுமையான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது; ஆகவே, இலங்கை கடற்பரப்புக்குள் போக வேண்டாம் என்ற எச்சரித்தது. இதன் காரணமாக ஓரிரு வருடங்களாக வராமல் இருந்திருந்த தமிழக மீனவர்கள், அந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை எனத் தெரிந்த பின்னர் மீண்டும் வர ஆரம்பித்து விட்டார்கள்.

அத்துமீறுபவர்களைக் கைது செய்து இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வது என்பதை மீன்பிடி அமைச்சு செய்ய வேண்டும். ஆகவே, சட்டத்தை அமுல்படுத்தாமல் இருப்பதே அத்துமீறல் தொடர்ச்சியாக நடப்பதற்குக் காரணமாக இருக்கின்றது.

மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நாங்கள் கூறுவது என்னவென்றால் சட்டங்களை இயற்றிக் கொடுத்திருக்கின்றோம். இதற்கான ஆயுதத்தை உங்களிடம் கொடுத்திருக்கின்றோம். அதை வைத்துக் கொண்டு செயல்படுத்தாமல் விடுவது எங்களுடைய மீனவர்களுக்கே பாதிப்புகளை ஏற்படுத்தும் - என்றார். (இ- 3)

# மாகாண சபைகளின் அழிவுக்கு தமிழ் கூட்டமைப்பே காரணம்

## பிள்ளையான் எம்.பி. குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, ஒக். 12

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயல்பாடுகளே, மாகாண சபைகள் இன்று மூன்றரை வருடங்களாக அழிந்துபோய் இருப்பதற்குக் காரணம்."

- இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி. விக்னேஸ்வரன் மீண்டும் முதலமைச்சராக வரக்கூடாது எனத் தமிழ்க் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட செயற்பாடே இதுவரையில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாமைக்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதல்கட்ட நிதி வழங்கும் நடவடிக்கை நேற்று நடைபெற்றது.

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்னம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் எம்.பி. பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட 33 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி இதன்போது வழங்கிவைக்கப்பட்டன. (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சக்கரகட்டி,காவியத்தலைவன் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு